# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு செ.ம.வேலுசாமி
வணக்கத்திற்குரிய மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 10529/ 2011 / எம்சி. 8 நாள் : 28.11.2011**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் **30.11.2011** புதன் கிழமை பிற்பகல் **2.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) செ.ம.வேலுசாமி
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

உண்மை நகல்

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - நவம்பர் 2011

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ. எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | மாமன்ற பிரிவு - 2011 உள்ளாட்சித் தேர்தல் - தேர்ந்தெடுக்கப்பட்ட வணக்கத்திற்குரிய மேயர், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் - மாமன்றம் பதிவு செய்தல் - தொடர்பாக |
| 2 | Jnnurm – நகர்புர ஏழை மக்களின் அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் திட்டம் - விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி பகுதிகளில் பயனாளிகள் கண்டறிதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 3 | Jnnurm – பில்லூர் 2-வது தனி குடிநீர் திட்டம் - கூடுதலாக விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது – மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் - தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - சிறப்புச் சாலைத் திட்டம் 2011-12 – பழுதடைந்த சாலைகளை புதுப்பித்தல் - நிர்வாக அனுமதி பெறப்பட்டு அரசு மானியம் பெறப்பட்டது – மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் - தொடர்பாக |
| 5 | Jnnurm – பாதாள சாக்கடைத் திட்டம் -ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்தல் - திருத்திய மதிப்பீடு தயாரித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 6 | Jnnurm – தானியங்கி பலஅடுக்குமாடி இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடங்கள் அமைத்தல் பணி – தனியார் பங்களிப்பு முறையில் மேற்கொள்ளுதல் - விருப்ப கேட்பு அறிக்கை பெறப்பட்டது – ரத்து செய்தல் - தமிழ்நாடு நகர்புர உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்கக் கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 7 | பொறியியல் பிரிவு - 4 தேசிய நெடுஞ்சாலைகளில் சாலை இருபுறங்களிலும் தானியங்கி இயந்திரவியல் நகரும் படிக்கட்டுடன் கூடிய மேல்நிலை நடைபாதை அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 8 | பொது கணக்குப் பிரிவு - வெள்ள சேத பணிகளுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | மாமன்றப் பிரிவு - வணக்கத்திற்குரிய மேயர் - தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்ளுதல் - அரசு ஆணை பதிவு செய்தல் - மற்றும் பின்னேற்பு கோருதல் -தொடர்பாக |
| 10 | பணியமைப்பு - பணியாளர்களின் ஈமச்சடங்கு பணம் உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 11 | பணியமைப்பு - பணியாளர்களின் மகன் மற்றும் மகள் திருமண முன்பணத் தொகை உயர்வு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 12 | பொறியியல் பிரிவு - பாதாள சாக்கடை குழாய் அடைப்புகள் அகற்றும் பணி – 2 கழிவு நீர் அடைப்பு அகற்றும் இயந்திரங்கள் வாங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 13 | பொது கணக்குப் பிரிவு - புதியதாக இணைக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை பணிகள் மேற்கொள்ள கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 14 | பொறியியல் பிரிவு - சிறப்புச் சாலைத் திட்டம் 2011-12 – பழுதடைந்த சாலைகளை புதுப்பித்தல் - புதிய பிரேரனை சமர்ப்பித்தல் - நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |
| 15 | பணியமைப்பு - மாநகர பொறியாளர் பதவியினை கண்காணிப்பு பொறியாளர் நிலைக்கு உயர்த்துதல் - அரசுக்கு பரிந்துரை செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 16 | Jnnurm – எட்டு நீர்நிலைகள் மேம்படுத்துதல் - மாமன்றம் ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 17 | Jnnurm – பில்லூர் II ம் குடிநீர் திட்டம் - அரசிற்கு உரிய பிரேரணை அனுப்புதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 18 | சுகாதாரப் பிரிவு - கொசுப்புகை மருந்தடிக்கும் இயந்திரங்கள் வாங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 19 | கல்விப் பிரிவு - பள்ளி மேலாண்மைத் திட்டம் அமைத்தல் - உத்தேச செலவினம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| 20 | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சிப் பகுதிகள் - குப்பைகள் அகற்றுதல் - செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக- |
| 21 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சிப் பகுதிகள் - குப்பைகள் அகற்றுதல் - செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக- |
| 22 | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் - புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சிப் பகுதிகள் - குப்பைகள் அகற்றுதல் - செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக- |
| 23 | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சிப் பகுதிகள் - குப்பைகள் அகற்றுதல் - செலவினம் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக- |
| 24 | பொறியியல் பிரிவு - 4 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 25 | பொறியியல் பிரிவு - 8 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 26 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 68 – சூரியன் வீதியில் சமுதாயக் கூடம் கட்டுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 27 | பொறியியல் பிரிவு - மாற்றுத் திறனாளிகளுக்கு கழிப்பறைகள் அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 28 | பொது கணக்குப் பிரிவு - மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட செல்போன் கட்டணம் - மாத வாடகை உயர்வு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 29 | குடிநீர் விநியோகம் - மாநகராட்சி அலுவலகங்களில் கணினிகளை இயக்க தேவையான விபர பதிவாளர் உள்ளிட்டவை – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 30 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - மாநகராட்சி பள்ளிகளில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி கோரியது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 31 | பொறியியல் பிரிவு - இடைநிரப்பு நிதி 2011-12 –வீரகேரளம் பகுதியில் எரிவாயு மயானம் அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 32 | பொறியியல் பிரிவு - இடைநிரப்பு நிதி 2011-12 –குறிச்சி பகுதியில் எரிவாயு மயானம் அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 33 | பொறியியல் பிரிவு - புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சிப் பகுதிகள் - led விளக்குகள் அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 34 | பொறியியல் பிரிவு - மாமன்ற கூட்ட அரங்கம் கட்டுதல் உள்ளிட்ட 5 பணிகள் மேற்கொள்ளுதல்- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 35 | பொறியியல் பிரிவு - புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சிப் பகுதிகள் - அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

அ) திருக்குறள்

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்

(குறள் 673)

விளக்கம்

இயலும் இடமெல்லாம் இயலும் முறையில் செயல்பட வேண்டும். அவ்வாறு இயலாத சூழ்நிலையில் முடிக்கும் வழியறிந்து நடக்க வேண்டும்.

திருவள்ளுவர்

---

ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 30.11.2011

மாண்புமிகு. தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 14வது சட்டமன்ற தேர்தலிலே வெற்றி பெற்று பல்வேறு திட்டங்களை அறிவித்து வருகின்ற முதலமைச்சர் அவர்களுக்கு இதயமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவிக்கும் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் முன்மொழியப்பட்டு, வடக்கு மண்டலத் தலைவர் பி.ராஜ்குமார் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 30.11.2011

உள்ளாட்சியில் நல்லாட்சியைக் காண அமைதியான முறையில் தேர்தலை நடத்தி மாநகராட்சியின் மேயராகவும், மாமன்ற உறுப்பினராகவும், உள்ளாட்சியில் வாய்ப்பு அளித்த தேர்தலை நடத்திய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கும் இதயமார்ந்த நன்றியை தெரிவிக்கும் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் முன்மொழியப்பட்டு, வடக்கு மண்டலத் தலைவர் பி.ராஜ்குமார் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சிறப்புத் தீர்மானம் எண் 3 நாள் 30.11.2011

மாநிலத்தினுடைய மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை அதிகாரிகளுடைய மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோவை மாநகருக்காக உக்கடம், ஆத்துப்பாலம் சாலையில் மேம்பாலம் அமைக்கவும், மேற்கு புறவழிச்சாலை அமைக்கவும், திருச்சி சாலை, அவிநாசி சாலை, மேட்டுப்பாளையம் சாலை, சத்தி சாலை ஆகிய சாலைகளை புனரமைக்கவும் நிதி ஒதுக்க அறிவித்ததற்காக நன்றி தெரிவிக்கும் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் முன்மொழியப்பட்டு, வடக்கு மண்டலத் தலைவர் பி.ராஜ்குமார் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**பொருள் எண் 1**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி - உள்ளாட்சித் தேர்தல் 2011- தேர்ந்தெடுக்கப்பட்ட வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், வார்டு குழு தலைவர்கள், நியமனக்குழு உறுப்பினர், நிலைக்குழு உறுப்பினர்கள் மற்றும் நிலைக்குழு தலைவர்கள் விபரம் - மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பித்தல் - தொடர்பாக

----------------

கடந்த 17.10.2011 ஆம் தேதி நடைபெற்ற கோயமுத்தூர் மாநகராட்சிக்கான நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த திரு.செ.ம.வேலுசாமி அவர்கள் கோயமுத்தூர் மாநகராட்சியின் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கோயமுத்தூர் மாநகராட்சியின் 100 வார்டுகளுக்கு நடைபெற்ற மாமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலில் அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த 78 பேர்களும், தி.மு.க.வைச் சேர்ந்த 10 பேர்களும், இ.தே.கா.வைச் சேர்ந்த 3 பேர்களும், பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த 2 பேர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒருவரும், தே.மு.தி.க.வைச் சேர்ந்த ஒருவரும், ம.தி.மு.க.வைச் சேர்ந்த ஒருவரும், சுயேட்சைகளாக நான்கு பேர்களும் மாமன்ற உறுப்பினர்களாக வெற்றி பெற்றனர். கடந்த 25.10.2011 ஆம் தேதி அன்று நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில், கோவை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கும், 100 மாமன்ற உறுப்பினர்களுக்கும் கோவை மாநகராட்சியின் ஆணையாளரால் பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

29.10.2011 அன்று காலை 09.30 மணிக்கு நடைபெற்ற கோவை மாநகராட்சியின் துணை மேயரை தேர்ந்தெடுக்கும் மறைமுகத் தேர்தலில் கோவை மாநகராட்சியின் 76வது வார்டின் மாமன்ற உறுப்பினரான அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த திரு.என்.சின்னதுரை அவர்கள் போட்டியின்றி துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கடந்த 20.11.2011 அன்று காலை 09.30 மணிக்கு கோவை மாநகராட்சியின் வார்டு குழு தலைவர்களுக்கான தேர்தல் நடைபெற்றது. இதில் கீழ்க்கண்ட வார்டு குழு தலைவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| வ. எண். | மண்டலம் | தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு குழு தலைவர் | வார்டு எண். | சார்ந்துள்ள கட்சி |
|---|---|---|---|---|
| 1 | வடக்கு | திரு.பி.ராஜ்குமார் | 46 | அ.இ.அ.தி.மு.க |
| 2 | கிழக்கு | திரு.கே.ஆர்.ஜெயராம் | 32 | அ.இ.அ.தி.மு.க |
| 3 | தெற்கு | திரு.எம்.பெருமாள்சாமி | 94 | அ.இ.அ.தி.மு.க |
| 4 | மேற்கு | திரு.பி.சாவித்திரி | 17 | அ.இ.அ.தி.மு.க |
| 5 | மத்தியம் | திரு.கே.ஏ.ஆதிநாராயணன் | 80 | அ.இ.அ.தி.மு.க |

கடந்த 20.11.2011 அன்று பிற்பகல் 02.30 மணிக்கு கோவை மாநகராட்சியின் நிலைக்குழு உறுப்பினா்களுக்கான தோ்தல் நடைபெற்றது. கீழக்கண்ட மாமன்ற உறுப்பினா்கள் நிலைக்குழு உறுப்பினா்களாக போட்டியின்றி தோ்வு செய்யப்பட்டனா்.

| வ. எண். | நிலைக் குழு | தோ்ந்தெடுக்கப்பட்ட நிலைக் குழு உறுப்பினா்கள் | வாா்டு எண் | சாா்ந்துள்ள கட்சி |
|---|---|---|---|---|
| 1 | கணக்குகள் குழு | 1. திரு.பி.கணேசன் | 70 | அ.இ.அ.தி.மு.க |
| | | 2. திரு.பி.மாரிசெல்வன் | 31 | சுயேட்சை |
| | | 3. திரு.பி.கே.ராஜேந்திரன் | 39 | அ.இ.அ.தி.மு.க |
| | | 4. திருமதி.ஆா்.மல்லிகா | 40 | அ.இ.அ.தி.மு.க |
| | | 5 திரு.செந்தில் (எ) பி.காா்த்திகேயன் | 35 | அ.இ.அ.தி.மு.க |
| | | 6. திருமதி.வி.வளா்மதி வெள்ளிங்கிரி | 65 | அ.இ.அ.தி.மு.க |
| | | 7. திருமதி.ஏ.செல்வி | 93 | அ.இ.அ.தி.மு.க |
| | | 8. திரு.எம்.கே.குத்புதீன் | 81 | அ.இ.அ.தி.மு.க |
| | | 9. திருமதி.ஆா்.கலைவாணி | 75 | அ.இ.அ.தி.மு.க |
| 2 | கல்விக் குழு | 1. திருமதி.ஆா்.சாந்தாமணி | 92 | அ.இ.அ.தி.மு.க |
| | | 2. திரு.கே.நாகராஜன் | 10 | அ.இ.அ.தி.மு.க |
| | | 3. திரு.பி.உதயகுமாா் | 30 | அ.இ.அ.தி.மு.க |
| | | 4. திருமதி.ஜே.ரங்கநாயகி | 50 | அ.இ.அ.தி.மு.க |
| | | 5. திரு.எஸ்.ஜே.அசோக்குமாா் | 51 | அ.இ.அ.தி.மு.க |
| | | 6. திருமதி.கண்ணம்மாள் மயில்வாணன் | 87 | அ.இ.அ.தி.மு.க |
| | | 7. திரு.எஸ்ஆா்.அா்ச்சுனன் (எ) கோபாலகிருஷ்ணன் | 28 | சுயேட்சை |
| | | 8. திருமதி.ஜி.சாவித்திரி | 91 | அ.இ.அ.தி.மு.க |
| | | 9. திரு.கோ.நா.அரங்கநாதன் | 55 | அ.இ.அ.தி.மு.க |
| 3 | சுகாதாரக் குழு | 1. திருமதி.எஸ்.தாமரைச்செல்வி | 66 | அ.இ.அ.தி.மு.க |
| | | 2. திரு.எஸ்.பாலன் | 62 | அ.இ.அ.தி.மு.க |
| | | 3. திரு.பி.வேணுகோபால் | 100 | அ.இ.அ.தி.மு.க |
| | | 4. திருமதி.டி.உமாதேவி | 13 | அ.இ.அ.தி.மு.க |
| | | 5. திரு.யு.எஸ்.சீதாராமன் | 54 | அ.இ.அ.தி.மு.க |
| | | 6. திரு.எஸ்.வெள்ளிங்கிரி | 37 | அ.இ.அ.தி.மு.க |
| | | 7. திரு.கே.சேதுவராஜ் | 64 | அ.இ.அ.தி.மு.க |
| | | 8. திருமதி.எஸ்.சாரதா சண்முகம் | 26 | அ.இ.அ.தி.மு.க |
| | | 9. திருமதி.எஸ்.கௌரி | 95 | அ.இ.அ.தி.மு.க |
| 4 | வரி விதிப்புக் குழு | 1. திருமதி.என்.வனிதாமணி | 3 | அ.இ.அ.தி.மு.க |
| | | 2. திரு.ஆா்.பிரபாகரன் | 48 | அ.இ.அ.தி.மு.க |
| | | 3. திரு.கே.மாரிமுத்து | 8 | அ.இ.அ.தி.மு.க |
| | | 4. திரு.ஜி.பாலகிருஷ்ணன் | 14 | அ.இ.அ.தி.மு.க |
| | | 5. திரு.இ.செந்தில் | 21 | அ.இ.அ.தி.மு.க |
| | | 6. திரு.கே.ரங்கராஜ் | 24 | அ.இ.அ.தி.மு.க |
| | | 7. திரு.சி.நடராஜன் | 41 | அ.இ.அ.தி.மு.க |
| | | 8. திரு.எம்.குணசேகரன் | 45 | அ.இ.அ.தி.மு.க |
| | | 9. திரு.பி.முத்துசாமி | 60 | அ.இ.அ.தி.மு.க |
| | | 10. திருமதி.ஜே.சசிரேகா | 72 | அ.இ.அ.தி.மு.க |
| | | 11. திருமதி.எஸ்.லீலாவதி உண்ணி | 73 | அ.இ.அ.தி.மு.க |
| | | 12. திருமதி.கே.கோமதி | 78 | அ.இ.அ.தி.மு.க |
| | | 13. திரு.பி.ஆறுமுகம் | 83 | அ.இ.அ.தி.மு.க |
| | | 14. திருமதி.ஏ.சமீனா | 90 | அ.இ.அ.தி.மு.க |
| | | 15. திருமதி.வி.சாவித்திரி | 99 | அ.இ.அ.தி.மு.க |
| 5 | நகரமைப்புக் குழு | 1. திரு.எஸ்.ராமசாமி | 59 | அ.இ.அ.தி.மு.க |
| | | 2. திரு.கே.பி.பால்ரோஸ் (எ) பால்ராஜ் | 63 | அ.இ.அ.தி.மு.க |
| | | 3. திருமதி.எம்.மலா்விழி | 67 | அ.இ.அ.தி.மு.க |
| | | 4. திரு.சக்திவேல் (எ) சத்தியசீலன் | 68 | அ.இ.அ.தி.மு.க |
| | | 5. திரு.டி.ஜே.செல்வக்குமாா் | 69 | அ.இ.அ.தி.மு.க |
| | | 6. திருமதி.எம்.லதா | 77 | அ.இ.அ.தி.மு.க |
| | | 7. திருமதி.ஆா்.அமுதா அருள்மொழி | 88 | அ.இ.அ.தி.மு.க |
| | | 8. திரு.கே.என்.செந்தில்குமாா் | 96 | அ.இ.அ.தி.மு.க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 9. திரு.எஸ்.ஜே.நிஜாம் | 98 | அ.இ.அ.தி.மு.க |
| | | 10. திரு.கே.கவிச்சந்திரமோகன் | 4 | அ.இ.அ.தி.மு.க |
| | | 11. திரு.கே.சின்னசாமி | 7 | அ.இ.அ.தி.மு.க |
| | | 12. திருமதி.ஜி.ஜெயந்தி | 20 | அ.இ.அ.தி.மு.க |
| | | 13. திருமதி.ஜே.தமிழ்மொழி | 34 | அ.இ.அ.தி.மு.க |
| | | 14. திரு.ஆர்.மாரப்பன் | 57 | அ.இ.அ.தி.மு.க |
| | | 15. திருமதி.எல்.சரஸ்வதி | 6 | அ.இ.அ.தி.மு.க |
| 6 | பணிகள் குழு | 1. திரு.ஆர்.ஏகாம்பரம் | 74 | அ.இ.அ.தி.மு.க |
| | | 2. திரு.டி.கே.கன்னையன் | 79 | அ.இ.அ.தி.மு.க |
| | | 3. திரு.ஏ.சந்திரன் | 84 | அ.இ.அ.தி.மு.க |
| | | 4. திரு.எம்.மணிமாறன் | 97 | அ.இ.அ.தி.மு.க |
| | | 5. திரு.கே.அர்ச்சுனன் | 85 | அ.இ.அ.தி.மு.க |
| | | 6. திருமதி.என்.அன்னபூரணி | 2 | அ.இ.அ.தி.மு.க |
| | | 7. திருமதி.என்.பிரபாவதி | 15 | அ.இ.அ.தி.மு.க |
| | | 8. திருமதி.ஜி.ஜே.குணசுந்தரி | 18 | அ.இ.அ.தி.மு.க |
| | | 9. திரு.ஆர்.மயில்சாமி | 19 | அ.இ.அ.தி.மு.க |
| | | 10. திருமதி.வி.அன்னம்மாள் | 22 | அ.இ.அ.தி.மு.க |
| | | 11. திருமதி.எஸ்.மணிமேகலை | 23 | அ.இ.அ.தி.மு.க |
| | | 12. திரு.கே.ஜெயபால் | 25 | அ.இ.அ.தி.மு.க |
| | | 13. திரு.எம்.மாரிமுத்து | 27 | அ.இ.அ.தி.மு.க |
| | | 14. திரு.ஆர்.வெண்தாமரைபாலு | 44 | அ.இ.அ.தி.மு.க |
| | | 15. திருமதி.ஜி.லலிதாமணி | 71 | அ.இ.அ.தி.மு.க |

கடந்த 21.11.2011 அன்று காலை 9.30 மணிக்கு கோயம்புத்தூர் மாநகராட்சியின் நியமனக்குழு உறுப்பினரை தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகத் தேர்தல் நடைபெற்றது. நியமனக்குழு உறுப்பினராக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்ட மாமன்ற உறுப்பினர் விவரம் பின்வருமாறு

| வார்டு எண் | நியமனக்குழு உறுப்பினர் பெயர் | சார்ந்துள்ள கட்சி |
|---|---|---|
| 9 | திரு. எம். ராஜேந்திரன் | அ.இ.அ.தி.முக |

கடந்த 21.11.2011 பிற்பகல் 2.30 மணிக்கு நிலைக்குழு தலைவர் தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகத் தேர்தல் நடைபெற்றது. நிலைக்குழு தலைவர்களாக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் விபரம் பின்வருமாறு-

| குழுவின் பெயர் | குழுத்தலைவர் பெயர் | வார்டு எண் | சார்ந்துள்ள கட்சி |
|---|---|---|---|
| கணக்குகள் குழு | திரு பி. கணேசன் | 70 | அ.இ.அ.தி.முக |
| கல்வி,பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு | திருமதி ஆர். சாந்தாமணி | 92 | அ.இ.அ.தி.முக |
| சுகாதாரக்குழு | திருமதி எஸ். தாமரைச் செல்வி | 66 | அ.இ.அ.தி.முக |
| வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு | திரு ஆர். பிரபாகரன் | 48 | அ.இ.அ.தி.முக |
| நகரமைப்புக்குழு | திரு கே.என். செந்தில்குமார் | 96 | அ.இ.அ.தி.முக |
| பணிகள் குழு | திரு கே. அர்ச்சுனன் | 85 | அ.இ.அ.தி.முக |

அலுவலகக் குறிப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், வார்டு குழு தலைவர்கள், நியமனக்குழு உறுப்பினர், நிலைக்குழு உறுப்பினர்கள் மற்றும் நிலைக்குழு தலைவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க. எண்.9602/2011/எம்.சி.8**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 141 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு பதிவு செய்யப்பட்டது.

---

**பொருள் எண் 2**

பொருள் : ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் – குடிசை பகுதிகளில் நகர்புர ஏழை மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டம் – மாநகராட்சி மற்றும் விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகளில் வசித்து வரும் பயனாளிகளை கண்டறிந்து ஒப்புதல் பெறப்பட்ட பயனாளிகளில் மீதமுள்ள பயனாளிகளை கண்டறிந்து பயன்பெற நடவடிக்கை மேற்கொள்ளுதல் – தொடர்பாக.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் குடிசை பகுதிகளில் வசித்து வரும் நகர்புர ஏழை மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளை மூன்று கட்டங்களாக **ரூ. 443.55/–**கோடி செலவில் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கடந்த 27.02.2007, 21.03.2007 & **29.10.2007–**ல் மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது. முதல் மற்றும் இரண்டாவது கட்டப் பணிகளாக முன்பு இருந்த கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் 72 வார்டுகளில் கண்டறியப்பட்ட **173** குடிசைப்பகுதிகளில், **80** குடிசைப்பகுதிகளில் வாழும் குடிசை வாழ் மக்களில் அரசு பட்டா மற்றும் பயனாளிகளின் பெயரில் பத்திரம் பெற்று குடிசை வீடுகளாக உள்ள **12630** எண்ணிக்கை கொண்ட பயனாளிகளின் குடிசை வீடுகளை ஆர்.சி.சி. கூரையுடன் கூடிய குடியிருப்புகளாக அவ்விடத்திலேயே மாற்றியமைக்க , ஒரு ஆர்.சி.சி. கட்டிட குடியிருப்பாக மாற்றுவதற்குண்டான மதிப்பீடு தொகை **ரூ. 1,60,500 / –** என்ற மதிப்பில் பயனாளிகள் மேற்கொள்ளவும், மொத்தமதிப்பீட்டு தொகையான **ரூ 202.71** கோடி செலவில் மத்திய அரசு **50** சதவீதம் மானியமாகவும், மாநில அரசு **40** சதவீதம் மானியமாகவும் வழங்கவும், பயனாளிகள் தங்கள் பங்களிப்புத் தொகையாக 10 சதவீதம் பயன்படுத்தி பயனாளிகள் பணியினை மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டது. இது தவிர குடிசைப்பகுதிகளில் நிரந்தர குடியிருப்புகள் இருந்து கழிப்பிட வசதி இல்லாத **1250** எண்ணிக்கை கொண்ட குடியிருப்புகளுக்கு கழிப்பிட வசதி **ரூ 2.03** கோடி செலவில் ஏற்படுத்திக் கொள்ளவும், அதற்கான மதிப்பீடு தொகையில் **10** சதவிதம் பயனாளிகள் தங்களின் பங்கு தொகையாக செலவிட்டு மானிய தொகையாக **90** சதவீதம் பயன்படுத்திக் கொள்ளவும் மற்றும் அக்குடிசைப்பகுதிகளில் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் விநியோகம் , பாதாள சாக்கடை வசதி , வடிகால் வசதி , சாலை வசதி மற்றும் தெருவிளக்கு வசதிகளுடன் செய்து தர ஆகும் மொத்த மதிப்பீடு **ரூ. 258.76 /–** கோடிக்கு மத்திய ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழுவின் ஒப்புதல் கடந்த 27.02.2007 மற்றும் 21.03.2007 ல் பெறப்பட்டது.

இத்திட்டத்தின் முதல் கட்டப் பணியில் மொத்தம் ஒதுக்கீடு பெறப்பட்ட **2707** எண்ணிக்கையிலான குடிசை வீடுகளை தார்சு வீடுகளாக மாற்றும் பணிக்கு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டு **1783** பணிகள் முடிக்கப்பட்டு பயனாளிகளின் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. மீதம் உள்ள **924** வீடு கட்டும் பணிகளில் , **682** பணிகள் **75%** நிலையிலும், **242** பணிகள் **50%** நிலையிலும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இரண்டாம் கட்டப் பணியில் மொத்தம் ஒதுக்கீடு பெறப்பட்ட **9923** குடிசை வீடுகளில் பயனாளிகள் கண்டறியப்பட்டு தார்சு வீடுகளாக மாற்றும் பணிக்கு **3270** பயனாளிகள் மட்டும் கண்டறியப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டது. அதில் இது வரை 2260 பணிகள் முடிக்கப்பட்டு பயனாளிகளின் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. மீதம் உள்ள 1010 பணிகளில், 624 பணிகள் **75%** நிலையிலும், **243** பணிகள் **50%** நிலையிலும் மற்றும் **143** பணிகள் **25%** நிலையிலும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி இரு கட்டப் பணியில் மொத்தம் ஒதுக்கீடு செய்யப்பட்ட **12630** பணிகளில் **5977** பயனாளிகளுக்கு மட்டும் பணி உத்தரவு வழங்கப்பட்டு மீதமுள்ள **6653** பயனாளிகள் திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளபடி பல்வேறு காரணங்களால் தேர்வு செய்ய இயலவில்லை. எனவே கடந்த 01.06.2011 முதல் 04.06.2011 வரையிலும் மற்றும் 06.9.2011 முதல் 09.09.2011 வரையிலும் இரு சிறப்பு முகாம்கள் மாநகராட்சியின் அனைத்து மண்டல அலுவலகங்களிலும் உதவி ஆணையாளர் மற்றும் அலுவலர்களுடன் நடத்தப்பட்டது. மேற்படி இரு சிறப்பு முகாம்களில் 1238 எண்ணிக்கை பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு , திட்ட செயலாக்க குழுவினரால் நேராய்வு செய்யப்பட்டு , பெறப்பட்ட விண்ணப்பங்களில் 403 எண்ணிக்கை கொண்ட பயனாளிகள் தகுதி பெற்றதால் ,மேற்படி பயனாளிகளுக்கு பணி உத்தரவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் மாநகராட்சி மூலம் தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பிட்டின் படி உள்ள **173** குடிசைப் பகுதிகள் (பகுதி I, பகுதி II மற்றும் பகுதி III) நீங்கலாக மாநகராட்சியில் குடிசை பகுதிகளாக இருந்து வரும் **82** ஊர் நந்தம் பகுதிகளிலும் இத்திட்டத்தினை செயல்படுத்த முகாம்களில் பெறப்பட்ட **835** விண்ணப்பங்களில் தகுதி வாய்ந்த பயனாளிகளை தேர்வு செய்யவும் , அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கி இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. மீதமுள்ள பயனாளிகளுக்கு மாற்றுப் பயனாளிகள் மாநகராட்சி எல்லை விரிவாக்கத்திற்குப் பின்னர் விரிவாக்க பகுதிகளில் பயனாளிகளை தேர்வு செய்து இலக்கினை அடைய நகராட்சி நிர்வாக ஆணையாளர் , சென்னை அவர்கள் தமது ந.க எண் **7915/2011**/IHSDP2 நாள் **21.02.2011** கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதன்படி கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட போது கீழ்கண்ட உள்ளாட்சி அமைப்புகள் கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் அரசாணை (நிலை)எண்.**114** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்:**25.08.2011** ல் உத்தரவு பெறப்பட்டு 2011 ம் ஆண்டு உள்ளாட்சி தேர்தல் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளுடன் சேர்ந்து கோயம்புத்தூர் மாநகராட்சியில் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் பதவி ஏற்று உள்ளனர்.

| வ. எண் | விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி பகுதிகள் | ஒப்புதல் பெறப்பட்ட நாள் | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கவுண்டம்பாளையம் நகராட்சி | 05.01.2009 | 179 |
| 2 | குனியமுத்துார் நகராட்சி | 29.12.2008 | 303 |
| 3 | குறிச்சி நகராட்சி | 29.12.2008 | 300 |
| 4 | சரவணம்பட்டி பேரூராட்சி | 29.12.2008 | 39 |
| 5 | வீரகேரளம் பேரூராட்சி | 29.12.2008 | 57 |
| 6 | துடியலுார் பேரூராட்சி | திட்ட ஒப்புதல் எதுவும் பெறப்படவில்லை | |
| 7 | காளப்பட்டி பேரூராட்சி | | |
| 8 | சின்னவேடம்பட்டி பேரூராட்சி | | |
| 9 | வெள்ளக்கிணறு பேரூராட்சி | | |
| 10 | வடவள்ளி பேரூராட்சி | | |
| 11 | விளாங்குறிச்சி கிராம ஊராட்சி | | |

இதில் முந்தைய கவுண்டம்பாளையம், குனியமுத்தூர், குறிச்சி நகராட்சி, சரவணம்பட்டி மற்றும் வீரகேரளம் பேரூராட்சி பகுதிகளில் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ( BSUP Scheme) ஒவ்வொரு ஆர்.சி.சி குடியிருப்புக்கும் மதிப்பீடு தொகையாக **ரூ. 1,30,000/–** வீதம் பயனாளிகள் தங்களது குடியிருப்புகளை மேம்படுத்தி கொள்ளவும் அதில் 10 சதவீதம் பயனாளிகளின் பங்கு தொகையாகவும் 90 சதவீதம் தொகையினை அரசு மானியமாக பெற்றும் பணிகளை மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது . அனுமதி பெறப்பட்ட கவுண்டம்பாளையம், குனியமுத்தூர் மற்றும் குறிச்சி நகராட்சி பகுதிகளில் மொத்தம் **782** பயனாளிகளுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டும், அதில் **374** பணிகள் பயனாளிகளால் முடிக்கப்பட்டும் மீதம் உள்ள **408** பணிகள் பயனாளிகளால் பணி மேற்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் நடைபெற்றும் வருகிறது. பேரூராட்சி பகுதிகளான வீரகேரளம் பேரூராட்சி பகுதியில் **57** பயனாளிகளுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டும், அதில் **21** பணிகள் முழுவதுமாக முடிக்கப்பட்டும் மீதமுள்ள **36** பணிகள் பயனாளிகளால் பணி மேற்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் நடைபெற்றும் வருகிறது. சரவணம்பட்டி பேரூராட்சி பகுதியில் **39** பயனாளிகளுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, **39** பணிகளும் பயனாளிகளால் முடிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் சமீபத்தில் பெய்த கனமழையால் BSUP திட்டத்தில் சேர்க்கப்படாத உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள குடிசைப்பகுதிகளில் உள்ள குடிசை வீடுகள் சேதமுற்று மக்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகி உள்ளதாலும், பல குடிசை வீடுகள் இடியும் நிலையில் உள்ளதாலும் அக்குடிசைப்பகுதிகள் விரிவாக்கப்பட்ட மாநகராட்சி பகுதிக்குள் வருவதால் நகர்ப்புர குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (BSUP) பயனாளிகள் தேர்வு செய்து இத்திட்டத்தினை செயல்படுத்த கோரியுள்ளார்கள்.

எனவே இத்திட்டத்தினை விரிவுபடுத்தும் பொருட்டு மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட மேற்குறிப்பிடபட்டுள்ள பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ள 94 குடிசைப்பகுதிகளில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் அரசு பட்டா வழங்கப்பட்ட பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் பெயரில் பத்திரப்பதிவு உள்ளவர்களுக்கும் இத்திட்டத்தினை செயல்படுத்தவும், இது தவிர ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெறப்பட்ட கவுண்டம்பாளையம், குனியமுத்தூர், குறிச்சி ஆகிய மூன்று ( 3 ) நகராட்சிகள் மற்றும் சரவணம்பட்டி , வீரகேரளம் போன்ற இரண்டு ( 2 ) பேரூராட்சி பகுதிகளில் உள்ள குடிசை பகுதிகளில் அரசு ஒப்புதல் பெறப்பட்ட பயனாளிகள் தவிர பிற தகுதியுள்ள பயனாளிகள் இருக்கும் பட்சத்தில் இத்திட்டத்தினை அப்பகுதிகளிலும் செயல்படுத்த மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு: அ . மாநகராட்சி மூலம் தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பிட்டின் படி உள்ள 173 குடிசைப் பகுதிகள் (பகுதி I, பகுதி II மற்றும் பகுதி III) நீங்கலாக மாநகராட்சியில் குடிசை ப குதிகளாக இருந்து வரும் 82 ஊர் நந்தம் பகுதிகளிலும் இத்திட்டத்தினை செயல்படுத்த முகாம்களில் பெறப்பட்ட 835 விண்ணப்பங்களில் தகுதி வாய்ந்த பயனாளிகளை தேர்வு செய்யவும் , அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கி இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ . மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ள 94 குடிசைப்பகுதிகளில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் அரசு பட்டா வழங்கப்பட்ட பயனாளிகள் மற்றும் பயனாளிகளின் பெயரில் பத்திரப்பதிவு உள்ளவர்களுக்கும் இத்திட்டத்தினை செயல்படுத்தவும் , இது தவிர ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் ஒப்புதல் பெறப்பட்ட கவுண்டம்பாளையம் குனியமுத்தூர் , குறிச்சி ஆகிய மூன்று ( 3 ) நகராட்சிகள் மற்றும் சரவணம்பட்டி , வீரகேரளம் போன்ற இரண்டு ( 2 ) பேரூராட்சி பகுதிகளில் உள்ள குடிசை பகுதிகளில் அரசு ஒப்புதல் பெறப்பட்ட பயனாளிகள் தவிர பிற தகுதியுள்ள பயனாளிகள் இருக்கும் பட்சத்தில் இத்திட்டத்தினை அப்பகுதிகளிலும் செயல்படுத்த மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் .

ந.க. எண். 13089/2006/JN1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 142 நாள் 30.11.2011**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

பில்லூர் இரண்டாவது தனி குடிநீர் திட்டம் ரூ.113.74 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள மத்திய அரசின் ஒப்புதல் கடந்த 28.12.2006—ல் பெறப்பட்டு, மாநில அரசின் நிர்வாக அனுமதி கடந்த 13.11.2007—ல் பெறப்பட்டது, இத்திட்டப்பணி (6) ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு சிப்பம் 2 முதல் சிப்பம் 6 வரையிலான ஐந்து பணிகள் மாநகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

இதில் சிப்பம் 1 பணியான பில்லூர் அணை பகுதியில் ரூ. 13.80 கோடி மதிப்பீட்டில் நீர் சேகரிப்பு கிணறு மற்றும் பெரிய கோம்பை மலை குகை நுழைவு வரை நீரேற்று பிரதான குழாய் அமைக்கும் பணி தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் 01.02.2008—ல் ஒப்படைக்கப்பட்டு, இப்பணிக்குத் தேவையான 1.83 ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலம் தமிழ்நாடு வனத்துறையிடமிருந்து கடந்த 02.07.2010ல் பெற்று பணி துவக்கப்பட்டது. 316 மீ நீளத்திற்கு இரும்புக் குழாய்கள் அமைக்கும் பணியும் 30 மீ ஆழமுள்ள நீர் சேகரிப்பு கிணற்றில், தற்போது 10 மீ உயரத்திற்கு ஆர்.சி.சி நீர் சேகரிப்பு கிணறு அமைக்கும் பணி முடிவுற்று இதர பணிகள் நடைபெற்று இப்பணிகள் ஏப்ரல் 2012—ல் முடிவுறும்.

நீர் சேகரிப்பு கிணறு பணி முடிவுற்றவுடன் நீர் இறைக்கும் 6 எண்ணிக்கை கொண்ட பம்புகள் மற்றும் மோட்டார்கள் அமைக்கும் பணி ரூ. 5.00 கோடி செலவில் மாநகராட்சியின் மூலம் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கடந்த 28.09.2011—ல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்து ஏப்ரல் 2012—ல் பணி முடிவுற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள சிப்பப் பணிகளான பெரிய கோம்பை மலை குகையிலிருந்து, இராமகிருஷ்ணாபுரம் பிரதான மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வரையிலான **35.5** கி.மீ நீளமுள்ள நீரேற்று குழாய் (Pumping Main) மற்றும் இயல்பு நீர் பிரதான குழாய் (Gravity Main) அமைக்கப்பட்டும், இராமகிருஷ்ணாபுரத்தில் **30** இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பிரதான குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டுதல் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது.

இத்திட்டப்பணிகள் அனைத்தும் முழுமையாக முடிக்கப்பட்டவுடன், கோவை மாநகராட்சிக்கு பில்லூர் II–வது தனி குடிநீர் திட்டத்தில் **125** மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்கப் பெறும். தற்போது தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம் பில்லூர் I–வது குடிநீர் திட்டத்திலிருந்து தண்ணீர் பெறப்பட்டு, சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.

நீர் சேகரிப்பு கிணறு அமைக்கும் பணி முடிவுறும் வரையில், தற்காலிக ஏற்பாடாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து பில்லூர் I–வது குடிநீர் திட்டத்திலிருந்து தற்போது வழங்கப்படும் **65** எம்.எல்.டி கொள்ளளவு குடிநீருடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஒப்புதல் பெற்று **30** எம்.எல்.டி கொள்ளளவுள்ள சுத்திகரிக்கப்படாத நீரை கூடுதலாக பெற்று, பில்லூர் II –வது குடிநீர் திட்டத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையம் மூலமாக சுத்திகரிக்கப்பட்டு கோவை மாநகர குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதியில் கூடுதலாக விநியோகம் செய்ய தமிழ்நாடு குடிநீர் வாரியத்திற்கு மாநகராட்சியின் மூலம் ரூ. **6,91,480/–** செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மாமன்றம் பதிவு செய்யலாம். ந.க.எண். 5656 / 09/ ஜே.என்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 143 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு பதிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 4**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – சிறப்புச் சாலைத் திட்டம் - 2011-2012 ன்கீழ் பழுதடைந்த சாலைகளை புதுப்பித்தல் - புதிய பிரேரணை சமா்ப்பித்தல் - நிர்வாக அனுமதி பெறப்பட்டு அரசு மானியம் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைத்தல் - தொடர்பாக.

சிறப்புச் சாலைத் திட்டம் 2011-12 ன்கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தில் பணிகள் முடிக்கப்பட்ட சாலைகள் மற்றும் ஏற்கனவே பாதாள சாக்கடை குழாய் அமைக்கப்பட்டள்ள சாலைகளில் பழுதடைந்த சாலைகளை புதுப்பித்தல் ஆகிய 32 பணிகளுக்கு 47.654 கி.மீ. நீளத்திற்கு மதிப்பீடு ரூ. 1453.05 லட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண் 23125/2011/இ3 நாள் 20.9.2011ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அதில் அரசு மானியமாக ரூ. 1180 இலட்சம் ஒதுக்கப்பட்டள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 8230/2010/எம்.டி. 3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 144 நாள் 30.11.2011</u>**

சிறப்பு சாலைத் திட்டம் 2011-12ன் கீழ் 32 பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி கடிதம் ந.க.எண்.23125/2011/இ3 நாள் 20.09.2011ஐயும், அரசு மானியமாக ரூ.1180 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதையும் பதிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சியில், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புரப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.**377.13** கோடி செலவில் செயல்படுத்த, மத்திய, மாநில அரசின் அனுமதி பெறப்பட்டு, மாநகரப் பகுதியினை எட்டு **(8)** மண்டலங்களாகப் பிரித்து, சிப்பம் I ன் கழிவு நீர் சேகரிப்பு மண்டலங்களாக (I, II, V & VI)–ம், சிப்பம் II ன் கழிவு நீர் சேகரிப்பு மண்டலங்களாக (III & VII)–ம் மற்றும் சிப்பம் III ன் கழிவு நீர் சேகரிப்பு மண்டலங்களாக (IV & VIII)–ம் பிரிக்கப்பட்டது. இம்மூன்று சிப்பப்பணிகளும் கழிவுநீர் குழாய்கள் பதித்தல் மற்றும் சோதனைக்குழிகள் அமைத்தல், வீட்டிணைப்பு கழிவுநீர் குழாய்கள் அமைக்கும் பணியும் கழிவுநீர் குழாய் பதித்தல் பணிக்கு பின்னர் வெட்டப்பட்ட தார்சாலை பகுதியை மட்டும் சிமெண்ட் கான்கிரீட் கொண்டு சீரமைக்கும் பணியும் கொண்டதாகும். இப்பணிக்கு தனித்தனியே தொழில்நுட்ப அனுமதி பெற்று தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

மூன்றாம் சிப்பப்பணியான கழிவுநீர் குழாய்கள் பதிக்கும் பணிக்கு கடந்த **09.04.2008–ல்** முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரிய போது, ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. **18.09.2008–ல்** இரண்டாம் முறையாக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியும் ஒப்பந்த மதிப்பீட்டுத்தொகைக்கு மிகவும் கூடுதலாக இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டு, மூன்றாவது முறையாக கடந்த **29.04.2009ல்** ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியாக தி/ள்.டி.வி.ஆர்.சி.பி.எல். – எச்.என்.பி.இ.பி.எல். (JV), ஹைதராபாத், என்ற நிறுவனத்திடமிருந்து மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதலாக **(29.00%)** பெறப்பட்டது. இந்நிறுவனம் விலைகுறைப்பிற்குப் பின்னர் மதிப்பீட்டைக் காட்டிலும் **24.99%** கூடுதலாக பணிகளைச் செய்து தர முன்வந்ததால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மாமன்றத் தீர்மான எண்.**46**, நாள்: 22.06.2009ன் படி ஏற்றுக்கொள்ளப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு **24.08.2009–ல்** முப்பது **(30)** மாத காலத்தில் பணியினை செய்து முடிக்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. பணி உத்திரவு விதிகளின்படி இதுநாள் வரை **27** மாதங்கள் முடிவுற்ற போதிலும் மொத்தமுள்ளதும், வடிவமைப்பின்படியும் கழிவுநீர் குழாய்கள் **297.46** கிமீ நீளத்திற்கு பதிக்க வேண்டியதில், மேற்படி நிறுவனம் **75.90** கிமீ நீளத்திற்கு மட்டுமே கழிவுநீர் குழாய்களை **(26%** சதவீதம்**)** பதித்துள்ளது. மேலும் கழிவுநீர் குழாய்கள் பதிக்க வெட்டப்பட்ட சாலைப்பகுதியில் **19** கிமீ நீளத்திற்கு மட்டுமே சாலை சீரமைத்துள்ளது. இதனால் சமீபத்திய மழையால் பொதுமக்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளானார்கள்.

மேற்படி ஒப்பந்ததார நிறுவனத்திற்கு, பணியினை துரிதப்படுத்தக்கோரி மாநகராட்சியின் மூலம் கடந்த **05.12.2009, 01.03.2010, 08.06.2010, 18.08.2010, 24.09.2010, 25.11.2010, 16.12.2010, 28.01.2011, 18.03.2011, 23.03.2011, 09.04.2011, 01.07.2011, 11.07.2011** மற்றும் **22.08.2011** ஆகிய தேதிகளில் குறிப்பாணை மற்றும் தாக்கீது அனுப்பப்பட்டும், பணியினை துரிதமாக நிறைவேற்றாத காரணத்தினால் அபராதமாக கடந்த **05.12.2009–ல்** ரூ. **10,000**மும், **2.07.2010–ல்** ரூ. **1.00** இலட்சமும், **3.11.2011–ல்** ரூ. **3.00** இலட்சமும் இறுதியாக **09.04.2011ல்** ரூ.**34,35,000/–**மும் அபராதம் விதிக்கப்பட்டு ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து பிடித்தம் செய்யப்பட்டும் பணியினை தொடர்ந்து துரிதமாக மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. கடந்த ஆகஸ்ட்–**2011** முதல் நான்கு **(4)** மாதங்களாக கழிவுநீர் குழாய்கள் பதித்தல், சோதனைத்தொட்டிகள் அமைத்தல், வீட்டிணைப்பு குழாய்கள் பதித்தல் மற்றும் சாலை சீரமைப்பு பணியென எந்த பணியையும் இந்நிறுவனம் மேற்கொள்ளவில்லை.

பணியினைத் துரிதப்படுத்துவது குறித்தும் பணியில் முன்னேற்றம் இல்லாதது குறித்தும் ஆய்வு செய்ய கடந்த **26.08.2011ல்** மேற்படி நிறுவன உரிமையாளர்களை நேரில் அலுவலகத்திற்கு வர கோரிய பின்னர், மேற்படி நிறுவனம் தங்களால் வர இயலாத சூழ்நிலையை தெரிவித்து **31.08.2011–ல்** நேரில் வருவதாக தெரிவித்திருந்தும், மாநகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வராமலும், பணியினை துவக்க எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளாமலும் காலம் தாழ்த்தி வந்தது.

இறுதியாக மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை ஏன் ரத்து செய்யக்கூடாது எனக்கோரி மேற்படி நிறுவனத்திற்கு இறுதி அறிவிப்பு (Final Show Cause Notice) கடந்த **03.09.2011ல்** அனுப்பப்பட்டும் மேற்படி நிறுவனம் நேரில் ஆஜராகாமல் **06.09.2011ந்** தேதிய கடிதம் வாயிலாக தகுந்த முகாந்திரம் இல்லாமல் காரண காரியமின்றி கடிதம் எழுதியதால் அதற்கான பதிலினை **21.09.2011–ல்** மாநகராட்சி மேற்படி நிறுவனத்திற்கு கடிதம் வாயிலாக அனுப்பியது. மாநகராட்சி இறுதியாக **04.10.2011ல்** இறுதி நினைவூட்டுக்கடிதம் அனுப்பியதில் ஒப்பந்ததாரர் நிறுவனம் **15.10.2011ல்** இது நாள் வரை நிறுத்திவைக்கப்பட்ட பணியினை துவக்கி விரைவில் முடித்துக்கொடுப்பதாக **05.10.2011ல்** பதில் அனுப்பியிருந்தது. இருந்த போதிலும் திட்டப்பணியினைத் துவக்க, மேற்படி ஒப்பந்ததார நிறுவனம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாததால், இத்திட்டப்பணியினை வேண்டுமென்றே கால தாமதம் செய்து வருவது ஊர்ஜிதமாகத் தெரிய வந்ததால் மேற்படி ஒப்பந்த நிறுவனத்திற்கு பணி துவக்கப்படுவதற்கு முன்னர் மாநகராட்சியின் மூலம் கடந்த **02.02.2010–ல்** ஆந்திர வங்கி, ஹைதராபாத் உத்தரவாதத்தின் பேரில் வழங்கப்பட்ட ரூ. **5.00** கோடி முன்பண தொகையில் (Mobilization Advance) இது நாள்வரை மூன்று பகுதி பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட ரூ. **1.00** கோடி முன்பணத்தொகை மற்றும் வட்டி விகிதத்தினை வசூலித்தது போக மேற்படி நிறுவனத்திடமிருந்து நிலுவையில் உள்ள ரூ. **4.00** கோடி நிதியினை மேற்படி ஆந்திர வங்கியிலிருந்து பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு கடந்த **14.11.2011–ந்** தேதியில் மாநகராட்சிக்கு திரும்பப் பெறப்பட்டது.

இப்பணியினை இந்நிறுவனத்திற்கு ஒப்படைத்த நாள் முதல் ஒப்பந்தகாலம் (30 மாத காலம்) முடிவுறும் நாளான **28.02.2012**–ல் ஒப்பந்தம் முடிவடைய உள்ளதாலும், இதுநாள் வரை மேற்படி நிறுவனம் **26%** சதவீத பணிகளான கழிவு நீர் குழாய்கள் பதித்தல் பணி மட்டுமே செய்துள்ளதால் ஒப்பந்த காலத்திற்கான மீதமுள்ள பணியினை இந்நிறுவனம் மேற்கொள்ள எவ்வித சாத்திய கூறும் இல்லாத காரணத்தாலும், கழிவு நீர் குழாய் பதித்தல் பணியிலும் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள சாலை சீரமைப்பு பணியினை மேற்கொள்ள தவறியதாலும் பொது மக்களின் கடும் அருப்திக்கு மாநகராட்சி நிர்வாகம் ஆளாகி உள்ளதாலும் இவ்வொப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை ஒப்பந்தவிதி (Condition of Contract-E 59.1.1 மற்றும் 59.1.2 [d] )யின் படி ரத்து செய்யவும் (Termination of Contract) மறுஒப்பந்தப்புள்ளி கோர உரிய மேல்நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ. ஒப்பந்தவிதி (Condition of Contract-E 59.1.1 மற்றும் 59.1.2 [d] )யின் படி ஒப்பந்த நிறுவனம் தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல்–ஹெச்.என்.பி.இ.பி.எல். (JV) {M/S. TVRCPL-HNBEPL(JV)}, ஹைதராபாத், கடந்த ஆகஸ்ட் மாதம் **2011** முதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி பணியினை நிறுத்தி பொது மக்கள் அதிருப்திக்கும், மாநகராட்சி நிர்வாகத்திற்கு அவப்பெயரையும் ஏற்படுத்தியுள்ளதாலும், பணியினைத் துவக்க பலமுறை வாய்ப்பு அளித்தும் பணியினை மேற்கொள்ள முன்வராததாலும், தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல்–ஹெச்.என்.பி.இ.பி.எல். (JV) ஒப்பந்தத்தினை ரத்து செய்ய மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ. மேற்படி நிறுவனத்தின் மூலம் இதுவரை செய்து முடிக்கப்பட்ட பணிகள் போக நிலுவையில் உள்ள பணிகளுக்கு தற்போதைய பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் விலைவிகிதத்தில் திருத்திய மதிப்பீடு தயாரிக்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ. இவ்வாறு திருத்திய மதிப்பீடு தயார் செய்வதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் போது ஏற்படும் கூடுதல் செலவினத்தினை தற்போது பணியினை செய்து முடிக்காமல் ரத்து செய்யப்படும் தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல்–ஹெச்.என்.பி.இ.பி.எல். (JV) நிறுவனத்திலிருந்து பிடித்தம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஈ. ஒப்பந்த நிறுவனம் தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல்–ஹெச்.என்.பி.இ.பி.எல். (JV) இப்பணிக்கான பணியுத்தரவு வழங்கிய பின்னர் முன்வைப்புத்தொகைக்கான ரூ. **2,44,11,000/–**க்கு ஆந்திர வங்கியில் உத்தரவாதமாக வழங்கிய வங்கி உத்தரவாதத்தினை முடக்கி வைக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

உ. தி/ள். டி.வி.ஆர்.சி.பி.எல்–ஹெச்.என்.பி.இ.பி.எல். கூட்டு நிறுவனமாக (Joint venture) இப்பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி மாநகராட்சி மூலம் ஒப்படைக்கப்பட்டு தற்போது பணியினை இக்கூட்டு நிறுவனம் மேற்கொள்ளாமல் இருப்பதால் இக்கூட்டு ஒப்பந்தத்தினை ரத்து செய்து மறுமுன்னீடு கோர நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதால் இக்கூட்டு நிறுவனத்தினை கறுப்புப்பட்டியலில் சேர்க்க அரசுக்குப் பரிந்துரைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க. எண். 1469/09/JN4**

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 145 நாள் 30.11.2011</u>

அலுவலகக் குறிப்பு அ, ஆ, இ, ஈ, மற்றும் உ ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 6**

கோவை மாநகராட்சிக்குட்பட்ட காந்திபுரம், கிராஸ்கட் சாலை, ஆர். எஸ். புரம். திவான் பகதூர் சாலை மற்றும் டவுன்ஹால் பகுதிகளில் அதிகளவில் பொதுமக்கள் பயன்படுத்தும் வணிக வளாகங்கள் அமைந்துள்ளது. இந்த பகுதியில் பொது மக்களின் இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடங்கள் போதுமானதாக இல்லாததால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது.

எனவே, மேற்படி பகுதிகளில் மாநகராட்சிக்கு சொந்தமான காலி இடங்களில் வணிக வளாகங்களுடன் கூடிய தானியங்கி பலஅடுக்குமாடி இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கும் பணியை தனியார் பங்களிப்பு (PPP) அடிப்படையில் அவர்களாகவே வடிவமைத்து, நிறுவி, நிர்ணயிக்கப்படும் காலத்திற்கு பராமரித்து, பின்னர் மாநகராட்சிக்கு ஒப்படைக்க (DBOT) மாமன்றம் தனது தீர்மான எண். 155, நாள்: 25.09.2007–ல் ஒப்புதல் வழங்கியதையடுத்து இப்பணியை மேற்கொள்ள " விருப்பு கேட்பு அறிக்கை" (Expression of Interest) கடந்த 07.03.2008-ல் கோரப்பட்டது.

இதில் கலந்து கொண்ட எட்டு நிறுவனங்களில் இரு நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு மேற்படி நிறுவனங்களுக்கு ஒப்பந்த ஷரத்துக்கள் அடங்கிய ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் மேற்படி ஆவணங்களைஅரசிற்கு அனுப்பி ஒப்புதல் பெற மாமன்றம் தனது தீர்மானம்.243, நாள்: 29.09.2008–ல் ஒப்புதல் வழங்கியது. அதன்பேரில் மேற்படி ஆவணங்கள் கடந்த 30.06.2008–ல் அரசிற்கு சமர்பிக்கப்பட்டது. மேற்படி ஆவணங்களின் ஷரத்துக்களில் கூடுதல் விபரங்கள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து அனுப்ப அரசு கோரியதன் அடிப்படையில் 17.10.2008, 02.03.2009 மற்றும் 24.11.2009 ஆகிய தேதிகளில் திருத்திய மாதிரி ஒப்பந்த ஷரத்துக்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஆவணங்கள் அரசிற்கு அனுப்பப்பட்டது.

இந்நிலையில் கடந்த 08.09.2010–ல் அரசிடமிருந்து பெறப்பட்ட கடித எண் 38509/MC2/2008/9, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 08.09.2010–ல் இம்மாதிரியான வணிக வளாகங்களுடன் கூடிய அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம் அமைக்கும் பணியை தனியார் பங்களிப்புடன் (PPP) அடிப்படையில் மேற்கொள்ள இருப்பின் இந்திய உட்கட்டமைப்பு திட்ட மேம்பாட்டு நிதி வசதியை (Indian Infrastructure Project Development Fund) பயன்படுத்தி கொண்டு, அரசால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி வாய்ந்த செயல்பாட்டு ஆலோசக நிறுவனம் (Transaction Advisor) மூலமாக விரிவான திட்ட அறிக்கையுடன் கூடிய, மாதிரி ஒப்பந்த ஷரத்துக்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஆவணங்கள் தயாரித்து தமிழக அரசின் நிபந்தனையின் கீழ் இயங்கும் PPP ஆலோசனையும் பெற தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி பணிக்காக, ஏற்கனவே பெறப்பட்ட விருப்ப கேட்பு அறிக்கைகளை ரத்து செய்யவும், அதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து தொடர் நடவடிக்கைகளை கைவிடவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. மேலும், இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை நிறுத்த அமைக்கப்படவுள்ள பலஅடுக்குமாடி தானியங்கி வாகனம் நிறுத்துமிடம் அமைக்க, முழு மானிய நிதியினை இயக்குநர், நகர ஊரமைப்பு இயக்குநரகம், சென்னை (Directorate of Town & Country Planning, Chennai) அவர்கள் வழங்க தயாராக உள்ளதாக தெரிவித்து இருப்பதால், இப்பணியினை தகுதியான தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனத்தினை நியமித்து அரசு நிதியினை மானியமாக பெற்று மாநகராட்சியே திட்டத்தினை மேற்கொள்ளும் வகையில் உரிய மதிப்பீடுகளுடன் ஒரு விரிவான திட்ட அறிக்கையும், தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் (PPP) இப்பணியினை நிறைவேற்றும் வகையில் உரிய ஷரத்துக்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஆவணங்களுடன் கூடிய மற்றொரு விரிவான திட்ட அறிக்கையும் தயாரித்து வழங்க அரசு நிறுவனமான "தமிழ்நாடு நகர்புர உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம் (TNUIFSL)"–ஐ கேட்டுக்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு</u>**

**அ)** கோவை மாநகராட்சிக்குட்பட்ட காந்திபுரம், கிராஸ்கட் சாலை, ஆர். எஸ். புரம். திவான் பகதூர் சாலை மற்றும் டவுன்ஹால் பகுதிகளில் வணிக வளாகங்களுடன் கூடிய பலஅடுக்கு தானியங்கி வாகனம் நிறுத்துமிடம் அமைப்பதற்காக கடந்த 07.03.2008–ல் பெறப்பட்ட அனைத்து விருப்பு கேட்பு அறிக்கைகளையும் (Expression of Interest) ரத்து செய்யவும், அதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை கைவிடவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) மேற்படி திட்டத்திற்கான தகுதியான தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனத்தினை நியமித்து அரசு நிதியினை மானியமாக பெற்று மாநகராட்சியே திட்டத்தினை மேற்கொள்ளும் வகையில் உரிய மதிப்பீடுகளுடன் ஒரு விரிவான திட்ட அறிக்கையும், தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் (PPP) இப்பணியினை நிறைவேற்றும் வகையில் உரிய ஷரத்துக்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய ஆவணங்களுடன் கூடிய மற்றொரு விரிவான திட்ட அறிக்கையும் தயாரித்து வழங்க அரசு நிறுவனமான "தமிழ்நாடு நகர்புர உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம் (TNUIFSL)"–ஐ கேட்டுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க எண். 10940/10/JN4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 146 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 7**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் கனரக வாகனங்கள், பேருந்துகள், மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் இடைவிடாது செல்லும் கீழ்கண்ட சாலைகளில் பொதுமக்கள் எவ்வித பாதுகாப்புமில்லாமல் சாலையினை கடக்க முயற்சிப்பதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுகிறது.

1. அரசினர் மருத்துவமனை எதிரே உள்ள தேசிய நெடுஞ்சாலை
2. கோயம்புத்தூர் ரயில்வே சந்திப்பு முன்புறமுள்ள தேசிய நெடுஞ்சாலை
3. உக்கடம் பேருந்து நிலையம் முன்புறமுள்ள தேசிய நெடுஞ்சாலை
4. மேட்டுப்பாளையம் சாலை புதிய பேருந்து நிலையம் முன்புறமுள்ள தேசிய நெடுஞ்சாலை

மேற்கண்ட சாலைகளில் பொதுமக்கள் நலன்கருதி சாலையினை பொதுமக்கள் பாதுகாப்புடன் கடக்க சாலை இருபுறங்களிலும் தானியங்கி இயந்திரவியல் நகரும் படிக்கட்டு மற்றும் சாதாரண நடை படிக்கட்டுடன் கூடிய சாலை மேல்நிலை நடைபாதை (SKY WALK WITH ESCALATOR) அமைக்கவும், அதற்கான மதிப்பீட்டினை தகுதி வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநரை நியமனம் செய்து தயாரிக்கவும், சாலை மேல்நிலை நடைபாதை அமைக்க செலவாகும் நிதியினை நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூர் திட்ட மேம்பாட்டு நிதியிலிருந்து முழு மானியமாகப் பெற்று பணியினை மேற்கொள்ளவோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் நிதியினை பெற்று பணியினை மேற்கொள்ளவோ அல்லது அரசிடமிருந்து பெறப்படும் மானிய நிதியுடன் மாநகராட்சி நிதியினை செலவழித்து பணியினை மேற்கொள்ளவோ உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -

அ) வாகன போக்குவரத்து அதிகமுள்ள மேற்கண்ட நான்கு தேசிய நெடுஞ்சாலையினை பொதுமக்கள் கடக்க சாலை இருபுறங்களிலும் தானியங்கி இயந்திரவியல் நகரும் படிக்கட்டு மற்றும் சாதாரண நடை படிக்கட்டுடன் கூடிய சாலை மேல்நிலை நடைபாதை (SKY WALK WITH ESCALATOR)அமைக்கவும், அதற்கான மதிப்பீட்டினை தகுதிவாய்ந்த தொழில்நுட்ப வல்லுநரை நியமனம் செய்து தயாரிக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) சாலை மேல்நிலை நடைபாதை அமைக்க ஆகும் நிதியினை நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூர் திட்ட மேம்பாட்டு நிதியிலிருந்து முழு மானியமாகப் பெற்றோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் நிதியினை பெற்றோ அல்லது அரசிடமிருந்து பெறப்படும் மானிய நிதியுடன் மாநகராட்சி நிதியினை செலவழித்து பணியினை மேற்கொள்ளவோ மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 10388/2011/எம்.டி. எம்

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 147 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 8**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – பொதுக் கணக்குப் பிரிவு – பருவ மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ள சேதப்பணிகளுக்கும் மற்றும் பிறப் பணிகளுக்கும் தற்போது உள்ள ஐந்து மண்டலங்களுக்கு மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் மொத்தம் 40 வார்டுகள் உள்ளது. ஏற்கனவே உள்ள 72 வார்டுகள் 60 வார்டுகளாக குறைக்கப்பட்டு தற்போது புதிதாக இணைக்கப்பட்டுள்ள 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் 1 ஊராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள 40 வார்டுகளுடன் சேர்த்து 100 வார்டுகளாகவும் ஐந்து மண்டலங்களாகவும் செயல்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் தற்போது பெய்து வரும் பருவ மழை காரணமாக தார்சாலைகள் மிகவும் சேதமடைந்துள்ளது. சேதமடைந்த சாலைகளில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் பருவ மழையின்காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதப் பணிகளை மேற்கொள்ளவும் ஒரு மண்டலத்திற்கு ஒரு கோடி வீதம் ஐந்து மண்டலங்களுக்கு ரூபாய் ஐந்து கோடியினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து இந்நிதியாண்டில் ஒதுக்கீடு செய்ய உத்திரவு வேண்டியும், இவ்வாறு நிதிநிலை அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட தொகையைவிட கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும் தொகையினை இறுதி திருத்திய ஒதுக்கீட்டில் (Final modified appropriation) சேர்த்துக் கொள்ளவும் உத்திரவு வேண்டியும் மன்றப்பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம். ந.க.எண்.10675/2011/பி1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 148 நாள் 30.11.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

**பொருள் :** கோயமுத்தூர் மாநகராட்சி – டர்பன் உள்ளாட்சி மாநாடு – இயற்கை சூழலுக்கு ஏற்ப இணைந்து செயலாற்றுவது – Cop17/CMP7 – 02.12.2011 முதல் 04.12.2011 முடிய தென் ஆப்பிரிக்காவில் நடைபெறுதல் -வணக்கத்திற்குரிய மேயர் பங்கேற்க அரசு அனுமதித்தது – அரசு ஆணை வெளியிடப்பட்டது – பதிவு செய்தல் மற்றும் பின்னேற்பு வேண்டுதல் - தொடர்பாக

**பார்வை :** 1. நிர்வாக இயக்குநர், ICLEI தென் ஆப்பிரிக்கா அவர்களின் கடிதம் நாள் 28.10.2011
2. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் தேர்தல் துறை (D) எண் 483 நாள் 25.11.2011.

---------

பார்வை 1-ல் கண்டுள்ள கடிதத்தின்படி, தென் ஆப்பிரிக்கா நாட்டின் டர்பன் உள்ளாட்சி அமைப்பால் இயற்கை சூழல் மற்றும் சீதோஷண நிலைக்கேற்ப இணைந்து செயலாற்றுவது தொடர்பான மாநாடு, Cop17/CMP7 – 02.12.2011 முதல் 04.12.2011 முடிய தென் ஆப்பிரிக்காவிலுள்ள டர்பன் நகரிலும், இத்துடன் இணைந்து ஐக்கிய நாடுகளின் பிரிவு நிறுவனமான UNFCCC COP17/CMP7, 28.11.2011 முதல் 9.12.2011 வரை டர்பனில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டிற்காக இந்தியாவிலிருந்து டெல்லி, கொச்சி, புனே மற்றும் புவனேஸ்வர் மாநகராட்சி மேயர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டிற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் சென்றுவர ஆகும் செலவு முழுவதையும் தென் ICLEI ஆப்பிரிக்கா ஏற்றுக்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் கண்டுள்ள அரசாணையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், 02.12.2011 முதல் 04.12.2011 முடிய டர்பனில் நடைபெற உள்ள மாநாட்டில் கலந்து கொள்ள அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 02.12.2011 முதல் 04.12.2011 முடிய டர்பனில் நடைபெற உள்ள மாநாட்டில் கலந்து கொள்ள வழங்கப்பட்ட அரசாணையைப் பதிவு செய்யவும் பின்னேற்பு வேண்டியும் மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அ) அரசாணையை பதிவு செய்யலாம்.
ஆ) வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 02.12.2011 முதல் 04.12.2011 முடிய டர்பனில் நடைபெற உள்ள மாநாட்டில் கலந்து கொள்வதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வழங்கலாம்.

ந.க.எண் 10629/2011/எம்.சி 8

**மாநகர மன்ற தீர்மானம் எண் 149 நாள் 30.11.2011**

அரசாணை பதிவு செய்யப்பட்டது. வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 02/12/2011 முதல் 04/12/2011 முடிய டர்பனில் நடைபெற உள்ள மாநாட்டில் கலந்து கொள்வதற்கு பின்னேற்பு வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 10**

பொருள்– பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – பணியாளர்கள் பணிக்காலத்தில் இறந்தால் ஈமச்சடங்கிற்கான முன்பணம் ரூ.2000/–லிருந்து ரூ.5,000/–ஆக உயர்த்துதல் சம்பந்தமாக.

––––––

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால் அவர்களது ஈமச்சடங்கிற்காக அரசாணை (நிலை) எண்.217 நிதி (ஓய்வு) நாள். 24.04.1997–ன்படி, ரூ.5,000/– வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஈமச்சடங்கிற்காக உடனடியாக ரூ.2,000/– மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் மக்கள் குறை தீர்க்கும் தினத்தில், ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஈமச்சடங்கிற்கான முன்பணத் தொகையை ரூ.2,000/– லிருந்து ரூ.5,000/– ஆக உயர்த்தி வழங்க வணக்கத்திற்குரிய மேயர் பரிந்துரைத்துள்ளார்.

எனவே வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் பரிந்துரையின்படி, பணியாளர்கள் இறந்தால், அவர்கள் குடும்பத்திற்கு வழங்கப்படும் ஈமச்சடங்கிற்கான தொகை ரூ.2,000/–லிருந்து ரூ.5,000/–ஆக உயர்த்தி வழங்கவும், மேற்படி தொகையினை இறந்த பணியாளரின் குடும்பத்திற்கு வழங்கப்படும் இறப்புகால ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம். ந.க.எண்.10563/2011/எம்சி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 150 நாள் 30.11.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 11**

பொருள்– பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – பணியாளர்கள் மற்றும் அவர்தம் மகன் மற்றும் மகள்களின் திருமண முன்பணத் தொகை – உயர்த்துதல் தொடர்பாக அரசுக்கு பரிந்துரை செய்ய – மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல்

––––––

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் திருமணத்திற்கும், அவர்களின் மகன் அல்லது மகள்களின் திருமணத்திற்கும், அரசாணை எண்.234, நிதித்துறை நாள் 30.03.1995–ன்படி, மகன் திருமணத்திற்கு ரூ.6,000/–ம், மகள் திருமணத்திற்கு ரூ. 10,000/–ம் திருமண முன்பணமாக வழங்கப்பட்டு வருகிறது.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் மக்கள் குறை தீர்க்கும் தினத்தில், ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் திருமண முன்பணத் தொகையை ரூ.10,000/–லிருந்து ரூ.24,000/– ஆக இருபாலருக்கும் உயர்த்தித்தரக்கோரி, பணியாளர்கள் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர். அக்கோரிக்கை தற்பொழுதுள்ள விலைவாசிகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டது.

இவ்வாறு பரிசீலிக்கையில் இக்கோரிக்கை ஏற்கக்கூடியது என தெரிய வருவதால், பணியாளர்களுக்கு திருமண முன்பணக் கடனாக வழங்கப்படும் தொகையை ரூ.10,000/–லிருந்து ரூ.24,000/– ஆக உயர்த்தி இருபாலருக்கும் வழங்க அனுமதி பெறுவதற்கும் அந்தத் தொகையினை நடைமுறையிலுள்ள வட்டி விகிதத்துடன் 24 மாத தவணைகளில் அசல் ரூ.24,000/–ஐ மாதம் ரூ.1,000/– வீதமும், வட்டியினை அடுத்த மாத தவணைகளில் மாதம் ரூ.1,000/– வீதமும் பணியாளர்களின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யும் வகையில் அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம். ந.க.எண்.10564/2011/எம்சி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 151 நாள் 30.11.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளிலுள்ள பாதாள சாக்கடை பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை அகற்றும் பணிகளுக்கென இரண்டு எண்ணிக்கைள் கழிவு நீர் அடைப்பு அகற்று (Vehicle Mounted Jetting Cum Suction Machine) இயந்திரங்கள் மற்றும் மாநகராட்சி பகுதிகளிலுள்ள பொதுக்கழிப்பிடங்களை சுத்தம் செய்யும் பணிகளுக்கென இரண்டு எண்ணிக்கைகள் கழிவு நீர் உறிஞ்சி (Vehicle Mounted Vacuum Suction Machine) இயந்திரங்கள் உள்ளன. சமீபத்தில் பெய்த கனமழையின் பொழுது இம்மாநகரின் பல்வேறு பகுதிகளிலுள்ள பாதாள சாக்கடை பிரதான குழாய்களில் ஏற்பட்ட அடைப்புகளை அகற்றும் பணிகளை இவ்விரண்டு இயந்திரங்களைக் கொண்டு உடனுக்குடன் செய்து முடிக்க இயலாத நிலை ஏற்பட்டதுடன் மிகுந்த காலதாமதம் ஏற்பட்டது. வருங்காலங்களில் இந்நிலையினை போக்க கூடுதலாக இரண்டு எண்ணிக்கைள் கழிவு நீர் அடைப்பு அகற்று இயந்திரங்கள் தேவைப்படும். மேலும் இம்மாநகராட்சியில் தற்சமயம் உள்ள இரண்டு கழிவு நீர் உறிஞ்சி (Vehicle Mounted Vacuum Suction Machine) இயந்திரங்களைக் கொண்டு எல்லை விரிவாக்கத்திற்கு பின்னர் உருவாகியுள்ள ஐந்து மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பொதுக்கழிப்பிடங்களை உடனுக்குடன் சுத்தம் செய்து முடிக்க இயலாத நிலை உள்ளது. எனவே இந்நிலையினை போக்க கூடுதலாக இரண்டு எண்ணிக்கைள் கழிவு நீர் உறிஞ்சி இயந்திரங்கள் தேவைப்படும்.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளிலுள்ள பாதாள சாக்கடை பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை அகற்றும் பணிகளுக்கென இரண்டு எண்ணிக்கைள் கழிவு நீர் அடைப்பு அகற்று (Vehicle Mounted Jetting Cum Suction Machine) இயந்திரங்கள் மற்றும் மாநகராட்சி பகுதிகளிலுள்ள பொதுக்கழிப்பிடங்களை சுத்தம் செய்யும் பணிகளுக்கென இரண்டு எண்ணிக்கைகள் கழிவு நீர் உறிஞ்சி (Vehicle Mounted Vacuum Suction Machine) இயந்திரங்களை ரூ.90.00 லட்சம் செலவினத்தில் இம்மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து வாங்கிக்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையரின் அனுமதி பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் : 10547/2011/ எம் டி4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 152 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – பொதுக் கணக்குப் பிரிவு – புதிதாக இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள 40 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான அடிப்படைப் பணிகள் செய்தல் – வருவாய் நிதியிலிருந்து கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் மொத்தம் 40 வார்டுகள் உள்ளது. ஏற்கனவே உள்ள 72 வார்டுகள் 60 வார்டுகளாக குறைக்கப்பட்டு தற்போது புதிதாக இணைக்கப்பட்டுள்ள 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் 1 ஊராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள 40 வார்டுகளுடன் சேர்த்து 100 வார்டுகளாக செயல்பட்டு வருகிறது.

மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள 40 வார்டுகளுக்குட்பட்ட பகுதியில் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான அடிப்படைப் பணிகள் மாநகராட்சியால் இந்நிதியாண்டில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது எனவே வார்டு ஒன்றிற்கு தலா ரூ.10,00,000/– வீதம் 40 வார்டுகளுக்கு ரூ.4,00,00,000/– மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து இந்நிதியாண்டில் ஒதுக்கீடு செய்ய உத்திரவு வேண்டியும், இவ்வாறு நிதிநிலை அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட தொகையைவிட கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும் தொகையினை இறுதி திருத்திய ஒதுக்கீட்டில் (Final modified appropriation) சேர்த்துக் கொள்ளவும் உத்திரவு வேண்டியும் மன்றப் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அனுமதிக்கலாம். ந.க.எண்.10674/2011/பி1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 153 நாள் 30.11.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 14**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – சிறப்பு சாலை திட்டம் 2011-12 ன் கீழ் பழுதடைந்த சாலைகளை புதுப்பித்தல் - நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வேண்டுதல் - அரசுக்கு புதிய பிரேரணை சமர்ப்பித்தல் - தொடர்பாக

-------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி சிறப்பு சாலைத்திட்டம் 2010-11 ன் கீழ் 27 சாலை பணிகளுக்கு மதிப்பீடு ரூ.520.86 இலட்சத்திற்கு 18.09.2010 ல் நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களிடமிருந்து அனுமதி பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் இரண்டாம் கட்டமாக புதிய பிரேரணையாக தற்சமயம் சிறப்பு சாலைத்திட்டம் 2011-12 ன் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தில் பணிகள் முடிக்கப்பட்ட சாலைகள் மற்றும் ஏற்கனவே பாதாள சாக்கடை குழாய் அமைக்கப்பட்டுள்ள சாலைகளில் பழுதடைந்த சாலைகளை புதுப்பித்தல் ஆகிய 32 பணிகளுக்கு 47.654 கி.மீ நீளத்திற்கு மதிப்பீடு ரூ.1453.05 லட்சத்திற்க நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது. அதில் அரசு மானியமாக ரூ.1180 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

மேலும் புதியதாக தயாரிக்கப்பட்டுள்ள சிறப்பு சாலைத் திட்டம் 2011-2012ன் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கப்பட்ட பகுதியில் 146.46 கி. மீ நீளத்திற்கு சாலைகள் புதுப்பித்தல் பணிக்கு ரூ.51.26 கோடி நிதி ஒதுக்கீடு அனுமதி வேண்டியும், நிர்வாக அனுமதி வேண்டியும் அரசுக்கு பிரேரணை அனுப்ப அனுமதி வேண்டியும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 8230/3011/எம்.டி 3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 154 நாள் 30.11.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 15**

**பொருள் :** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகரப் பொறியாளர் பதவியினை கண்காணிப்பு பொறியாளர் நிலைக்கு உயர்த்த – அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

-----

அரசாணை எண்.**114**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.**25.08.2011**–ன்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் **11** உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டு முன்பு இருந்த **105** சதுர கிலோமீட்டர் பரப்பளவு தற்பொழுது **247** சதுர கிலோமீட்டராக விரிவடைந்துள்ளது. புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகள் மிக பரந்து விரிந்திருப்பதால் தற்பொழுதுள்ள **100** கோட்டங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள், குடிநீர் விநியோகம் போன்ற அத்தியாவசிய பணிகளுடன் நிர்வாக கட்டிடங்கள், பள்ளிக் கட்டிடங்கள், மருத்துவ மனைகள், பேருந்து நிலையம், திருமண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள், சந்தைகள், வணிகக் கட்டிடங்கள், பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள், வாகன நிறுத்தங்கள், கழிவுநீர் பண்ணை, அலுவலர் குடியிருப்பு, பேருந்து நிற்குமிடம், மயானம், மாட்டுத் தொழுவம், சலவைத்துறை, உடற்பயிற்சி மையங்கள், கழிப்பிடங்கள், சாலைகள், மழைநீர் வடிகால், கிணற்றுநீர் விநியோகம், குடிநீர் விநியோகம் மற்றும் நகரமைப்புப் பணிகள், பொறியியல் மற்றும் நகரமைப்பு பிரிவுகளில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இந்நிலையில், மேற்கண்ட பணிகளை கண்காணிக்கவும், திறம்பட செயல்படுத்திச் செல்லவும், கோயம்புத்தூர் மாநகராட்சி பொறியியல் பிரிவிற்கு கண்காணிப்பு பொறியாளர் பணியிடம் மிகவும் அவசர அவசியமாக உள்ளது. எனவே மேற்கண்ட கண்காணிப்பு பொறியாளர் பணியிடத்தை, மாநகராட்சியில் தோற்றுவிக்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம். ந.க.எண். **10676 /2011/எம்சி1**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 155 நாள் 30.11.2011**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 16**

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் பொதுப்பணித்துறை பராமரிப்பில் இருந்த கீழ்க்கண்ட (8) எட்டு நீர்நிலைகளிலும் ஆக்கிரமிப்பு குடியிருப்புகள் அதிகளவில் உருவாகிவிட்டதாலும், நீண்ட காலமாக நீர்நிலைகள் தகுந்த பராமரிப்பின்றி இருந்து வந்ததால், எட்டு நீர்நிலைகளை முழுமையாக தூர்வாரி, கரைகளை மேம்படுத்தி நீர்நிலைகளில் சேரும் கழிவுநீரினை சுத்தப்படுத்தி நீர்நிலைகளில் விடவும்,மழைகாலங்களில் பெறப்படும் மழைநீரினை நீர்நிலைகளில் சேமித்து நிலத்தடி நீரினை நீர்நிலைகள் அருகாமையில் உள்ள பகுதிகளில் மேம்படுத்தி செயல்படுத்தும் நோக்கத்துடன் நீர்நிலைகளை புனரமைத்து சீரமைக்கும் பணியை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடு தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனமான தி/ள். ஆப்ரோ, பெங்களூர் என்ற நிறுவனம் மூலமாக தயாரிக்கப்பட்டது.

1. நரசம்பதி குளம்
2. கிருஷ்ணம்பதி குளம்
3. செல்வம்பதி குளம்
4. குமாரசாமி / முத்தண்ணன் குளம்
5. செல்வ சிந்தாமணி குளம்
6. பெரிய குளம்
7. வாளாங்குளம்
8. சிங்காநல்லூர் குளம்

இத்திட்ட அறிக்கையினை அரசாணை (ப) எண்.240 பொதுப்பணித் (க்யூ1) துறை, நாள் 22.05.2008–ன்படி பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் அவர்களுக்கு அனுப்புவித்து கடந்த 16.12.2009–ல் தொழில்நுட்ப பொது இசைவு (Technical Clearance) பெறப்பட்டது. இப்பணியினை மத்திய, மாநில அரசு மானிய நிதி பெற்றும் மாநகராட்சி பங்கு நிதி செலவழித்து மேற்கொள்ளயிருப்பதால் பொதுப்பணித்துறை வசம் உள்ளதை மாநகராட்சி வசம் நீண்டகால குத்தகை அடிப்படையில் ஒரு குளத்திற்கு ரூ. 100 வீதம் ஆண்டு ஒன்றுக்கு வழங்கவும், குளத்தினை ஒப்படைக்கவும் அரசு ஆணை எண். 257, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள் 29.12.2009–ல் பெப்பட்டது.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்த உரிய நிதி எதுவும் ஒதுக்கப்படாததால், மேற்படி நீர்நிலைகளை தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership) மேம்படுத்த நடவடிக்கை தமிழ்நாடு நகர்புர புனரமைப்பு நிதி சேவை நிறுவனம் (TNUIFSL), சென்னை மூலம் மேற்கொள்ளப்பட்டு பொது மக்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கருத்துக்கள் பெறப்பட்டது. தனியார் பங்களிப்புடன் நீர்நிலைகளை மேம்படுத்தினால், நீர்நிலைகளை வர்த்தக தன்மையுடன் தனியார் நிறுவனங்கள் செயல்படுத்த வாய்ப்பு உள்ளதால் தனியார் பங்களிப்புடன் இத்திட்டப் பணியினை செயல்படுத்த ஆட்சேபனை பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பிற மாநிலங்களில் நீர்நிலைகளை வர்த்தக ரீதியாக பயன்படுத்த கூடாது என நீதிமன்ற தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் அம்மாதிரியான நிகழ்வுகள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்படல் வேண்டும். மேலும் தற்போது பெய்த மழையின் காரணமாக நீர்நிலைகளுக்கு செல்லும் கால்வாய்கள் ஆக்கிரமிப்பு பணியில் மழைநீர் அருகாமையில் உள்ள குடியிருப்புகளுக்கு சென்று பொதுமக்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகின்றனர். எனவே, நீர்நிலைகள் மேம்படுத்துவதுடன் நீர்நிலைகளுக்கு வரும் வடிகால்களையும் புனரமைக்கும் அவசியமேற்படுகிறது.

எனவே, மாநகராட்சி பகுதிகளில் உள்ள மேற்கண்ட 8(எட்டு) நீர்நிலைகளை சுற்றுப்புற சூழல் மற்றும் நீர்வளங்களின் இயற்கை தன்மை மாறாமல் புனரமைத்து மேம்படுத்தவும் அதற்கான திட்ட மதிப்பீடு தொகையாக கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ள ரூ. 134.16 கோடி நிதியினை மத்திய, மாநில அரசிடமிருந்து முழு மானியமாகவோ அல்லது அரசிடமிருந்து பெறப்படும் மானிய நிதியுடன் மாநகராட்சி பங்கு நிதியும் சேர்த்து பணியினை மேற்கொள்ள உரிய பிரேரனைகள் அரசிற்கு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

ரூபாய் லட்சத்தில்

| | | |
|---|---|---|
| அ) நீர்நிலைகளை பராமரித்தல்: | | |
| 1) நரசம்பதி குளம் | – | 541.36 |
| 2) கிருஷ்ணம்பதி குளம் | – | 563.27 |
| 3) செல்வம்பதி மற்றும் குமாரசாமி குளம் | – | 1006.47 |
| 4) செல்வசிந்தாமணி குளம் | – | 267.60 |
| 5) பெரிய குளம் | – | 1424.50 |
| 6) வாலாங்குளம் | – | 1337.12 |
| 7) சிங்காநல்லூர் குளம் | – | 1529.98 |
| ஆ) நீர்நிலைகளில் சேரும் வடிகால்களை மேம்படுத்தி பராமரித்தல் | – | 6559.55 |
| இ) நீர்நிலைகள் மற்றும் வடிகால் பராமரிப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | – | 186.00 |
| மொத்தம் | | 13415.83 லட்சம் ரூ. 134.16 கோடி |

அலுவலகக் குறிப்பு: அ) எட்டு நீர்நிலைகளை மேம்படுத்தவும், நீர்நிலைகளுக்கு வரும் வடிகால்களை சீரமைக்கவும் மற்றும் பொதுமக்களிடம் பராமரிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தேவையான நிதி ரூ. 134.16 கோடி தொகையினை அரசிடமிருந்து மானியமாக பெற உரிய பிரேரனைகள் அரசிற்கு அனுப்ப மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) அரசு வழங்கும் மானிய நிதியுடன் மாநகராட்சி பங்கு நிதி சேர்த்து பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பின் மாநகராட்சி பொது நிதியிலிருந்தோ அல்லது மாநகராட்சி பங்கு நிதியினை நிதி நிறுவனத்திடமிருந்து கடனாக பெற்றோ இத்திட்டப் பணியினை மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 13090/06/JN5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 156 நாள் 30.11.2011**

அலுவலகக் குறிப்பு அ மற்றும் ஆ ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 17**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் (பில்லூர் II) திட்டம் ரூ.113.74 கோடி செலவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு 6 (ஆறு) சிப்பப்பணிகளாக பிரிக்கப்பட்டு சிப்பம் எண் 1 பணியான பில்லூர் டேம் பகுதியில் நீர்சேகரிப்பு கிணறு 30 மீட்டர் ஆழத்திற்கு அமைக்கும் பணி மற்றும் பெரிய கோம்பை மலை குகை நுழைவு வரை நீரேற்று பிரதான இரும்பு குழாய் 316 மீட்டர் நீளத்திற்கு அமைக்கும் பணி நீங்கலாக 125 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணி, 11 கி.மீ நீளத்திற்கு பம்பின் மெயின் குழாய்கள் பதித்தல் பணி இராமகிருஷ்ணாபுரம் பகுதியில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை தொட்டி வரையிலான இயல்புநீர் பிரதான குழாய்கள் 24.67 கி.மீ நீளத்திற்கு பதித்தல் பணி முடிவுற்று உள்ளது.

தற்சமயம் பில்லூர் I திட்டத்திலிருந்து நீர் பெறப்பட்டு பிரதான பம்பிங் குழாய் மற்றும் இயல்புநீர் பிரதான குழாய்களில் கழிவுகள் சுத்தம் செய்தும், சுத்திகரிப்பு நிலைய சோதனை ஓட்டஇயக்கப்பணியும் நடைபெற்று இராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத்தொட்டி வரையில் குடிநீர் வரத்தக்க வகையில் தயர் நிலையில் உள்ளது. பில்லூர் II வது தனி குடிநீர் திட்டத்தின் மூலம் மாநகராட்சிக்கு பெறப்படவுள்ள 125 எம்.எல்.டி கொள்ளளவு பாதுகாக்கப்பட்ட குடிநீருடன், சிறுவாணி குடிநீர் திட்டத்திலிருந்து பெறப்படும் 85 எம்.எல்.டி குடிநீரும் சேர்த்து, மாநகராட்சியில் பெறப்படும் 210 எம்.எல்.டி குடிநீரினைப் பயன்படுத்தி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும், அனைத்து நாட்களிலும் சீரான குடிநீர் விநியோகத்துடன் 24 மணி நேரமும் கிடைக்கும் வகையில் முன்பிருந்த மாநகராட்சிப் பகுதியில் இயக்கப்பட்டு வரும் 34 எண்ணிக்கை கொண்ட மேல்நிலை தொட்டிகளுடன், கூடுதலாக 29 எண்ணிக்கை கொண்ட மேல்நிலைதொட்டிகள், 3 எண்ணிக்கை கொண்ட கீழ்நிலை தொட்டிகள், அனைத்து மேல்நிலை, கீழ்நிலை தொட்டிகளுடன் குடிநீர் கொண்டு செல்ல தேவையான பிரதான குழாய்கள் (feeder main) 90 கி.மீ. நீளத்திற்கு அமைக்கவும்,

அனைத்துச் சாலைகளிலும் குடிநீர் விநியோக மெயின்கள் (Distribution main) சுமார் **1360** கிமீ. நீளத்திற்கு வடிமைப்பின்படி அமைக்கவும், விரிவான திட்ட அறிக்கை தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனமான தி/ள். பிட்சனர் கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் (இ) பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் மூலம் தயாரிக்கப்பட்டு, மேற்படி திட்டத்திற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகையாக ரூ. **595.24** கோடி செலவாகுமென கணக்கிடப்பட்டுள்ளது.

இதில் தற்சமயம் பில்லூர் I–வது திட்டத்தில் பயன்படுத்தப்படவுள்ள தற்போதுள்ள இரு மலை குகைகளுக்கு பதிலாக கூடுதலாக **265** எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட பெரியகோம்பை மலை குகை மற்றும் கட்டன் மலையில் **265** எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட மலைகுகை அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம் முழுமையாக முடிக்கப்பட்ட பின்னர் பெறப்படும் **125** எம்.எல்.டி. குடிநீர் சிறுவாணி குடிநீர் திட்டத்திலிருந்து பெறப்படும் **85** எம்.எல்.டி. குடிநீரினையும் சேர்த்து முன்பிருந்த மாநகரப் பகுதிகள் அனைத்திலும் சீரான, அனைத்து நாட்களும் குடிநீர் கிடைக்கத்தக்க வகையில் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேசத் திட்ட மதிப்பீடு தொகையான ரூ. **595.24** கோடி நிதியினை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்ட நிதியில் மத்திய மாநில அரசின் அனுமதிக்கப்பட்ட மானிய நிதியுடன் மாநகராட்சி பங்கு நிதியினை மாநில அரசிடமிருந்து முழு மானியமாகவோ, அல்லது அரசால் ஒதுக்கப்படும் மானிய நிதியுடன் மாநகராட்சி பங்கு நிதியினை பயன்படுத்தி திட்டம் மேற்கொள்ள வேண்டியிருப்பின், மாநகராட்சி பங்கு நிதிக்கு அரசு சார்பு நிதி நிறுவனத்திடமிருந்து கடனாக பெற்றோ பணியினை நிறைவேற்ற அரசிற்கு உரிய பிரேரனைகள் அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :-</u>** மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண். **906 / 11 /** ஜே.என்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 157 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 18**

பொருள் : பொதுசுகாதாரம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – கொசு ஒழிப்புத் திட்டப் பணிகளை விரிவாக்கப்பட்ட மாநகராட்சிப் பகுதிகளிலும் சிறப்பாகச் செயல்படுத்த – கொசுப்புகை மருந்தடிக்கும் இயந்திரங்கள் மற்றும் மருந்து தெளிப்பான்கள் வாங்குவது – தொடர்பு.

*****

கோயம்புத்தூர் மாநகராட்சியில் வாகனங்களில் பொருத்தப்பட்ட கொசு ஒழிப்புப் புகை மருந்து அடிக்கும் இயந்திரங்கள் மூன்று மட்டுமே உள்ளது. தற்போது மாநகராட்சி ஐந்து மண்டலங்களாக விரிவு படுத்தப்பட்டுள்ளது. ஏனவே கூடுதலாக வாகனங்களில் பொருத்தப்பட்ட கொசு ஒழிப்புப் புகை மருந்தடிக்கும் இயந்திரங்கள் இரண்டு எண்ணிக்கையில் வாங்கி மண்டலத்திற்கு ஒன்று வீதம் கொசுப்புகை மருந்தடிக்கும் பணிகளை மேற்கொள்ளலாம்.

மேலும், கையால் எடுத்து சென்று கொசுப்புகை மருந்தடிக்கும் இயந்திரங்கள் (Hand Held Fogging Machines) **50** எண்ணிக்கைகள் மட்டுமே உபயோகத்தில் உள்ளது. விரிவு படுத்தப்பட்ட மாநகராட்சியில் **100** வார்டுகள் உள்ளதால், வார்டுக்கு ஒன்று வீதம் வழங்க **50** எண்ணிக்கைகள் கையால் எடுத்து சென்று கொசுப்புகை மருந்தடிக்கும் இயந்திரங்கள் வாங்கவும், மற்றும் சாக்கடைகள் மற்றும் மழைநீர் தேங்கி நிற்கும் இடங்களில் கைதெளிப்பான்கள் மூலம் கொசுப்புழுக்களை அழிக்கும் தெளிப்பான்கள் **60** மட்டுமே நல்ல நிலையில் உபயோகத்தில் உள்ளதால், கூடுதலாக **40** எண்ணிக்கைகள் கைதெளிப்பான்கள் வாங்கி அனைத்து வார்டுகளிலும் வார்டுக்கு தலா **1** வீதம் பயன்படுத்தவும் மற்றும் மேற்காண் இயந்திரங்கள் மற்றும் தெளிப்பான்கள் வாங்குவதற்கான உத்தேச செலவினமாக ரூ. **50.16** இலட்சம் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் கோப்பு எண்: **4277/2011/**எம்.இ.**4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 158 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 19**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – பள்ளி மேலாண்மை திட்டம் (School Management System) – மதிப்பீடு உத்தேசமாக ரூ. 25,00,000/– நிர்வாக அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானக்குழு மாநகராட்சி பள்ளிகள் மேம்பாடு மற்றும் கல்வி திறன் உயர்த்துதல் சார்ந்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு கருத்துக்கள் பரிந்துரைக்கப்பட்டதில் மாநகராட்சி பள்ளிகளை மாநகராட்சி மைய அலுவலகத்துடன் கணினி மூலம் இணைக்கவும், பள்ளிப் பணிகளை கணினி மயமாக்கவும் பள்ளி மேலாண்மை திட்டத்தினை (School Management System) அமைத்திட உரிய மென்பொருள்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான சாத்தியகூறுகளை ஆராய நிபுணர் குழு அமைக்க ஆணையாளர் அவர்களால் உத்திரவிடப்பட்டது. இக்குழுவில்

1. திரு. எஸ். சிவராசு, துணை ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.
2. டாக்டர். ஆர். பிரபாகர், செயலாளர் மற்றும் பேராசிரியர், சி.ஐ.டி. கல்லூரி, கோயம்புத்தூர்.
3. திரு. பிரசாந் ஆர். நாயர், செக்ரட்டரி ஆப் கம்யூட்டர் செசைட்டி ஆப் இந்தியா & துணைத் தலைவர், தகவல் தொழில் நுட்பம், அமிர்தா பல்கலை கழகம்.
4. டாக்டர். சி. கிருஷ்ணமூர்த்தி, CTAG / CVTC உறுப்பினர், அயல்நாட்டிலும் இந்தியாவிலும் மென்பொருள் நிறுவன இயக்குநர்.
5. திரு. கே. வெங்கடேஷ், NIC / DIA, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர்.
6. திருமதி. டி. சௌதாமணி, தொழில்நுட்ப அலுவலர், கோயம்புத்தூர் மாநகராட்சி.
7. திருமதி. எச். வசந்தா, உதவி மாநகராட்சி கல்வி அலுவலர், கோயம்புத்தூர் மாநகராட்சி.

இடம் பெற்றனர்.

மேற்கண்ட நிபுணர் குழு மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானக்குழுவுடன் 12.08.2011 அன்று ஆணையாளர் அவர்களின் தலைமையின் கீழ் இரண்டாம் கட்டமாக திட்டத்தில் மாநகராட்சி பள்ளிகளில் மென்பொருள் மூலம் கீழ்கண்ட பணிகளில் மாநகராட்சி பிரதான அலுவலகத்துடன் பள்ளிகளை இணைக்க திட்டமிடப்பட்டது.

1. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வருகையை பதிவு செய்தல்.
2. தேர்வுகளின் மதிப்பெண்களை ஆய்வு செய்தல்.
3. பயன்பாட்டு மேலாண்மை
4. பள்ளி சேர்க்கை
5. கணக்குகள்
6. பள்ளி கட்டணம்
7. நூலக மேலாண்மை
8. செயல்பாடுகள் மற்றும் நிகழ்வுகள்
9. சுகாதாரம்
10. ஒழுங்கு
11. ஆராய்வுகள்
12. ஆய்வுக்கூட மற்றும் இதர பொருள்கள் வாங்குதல் மற்றும் நன்கொடை பெறுதல்
13. பணி நிலை
14. பாட திட்ட பதிவுகள்
15. SSA மற்றும் PTA நிதி கணக்குகளை ஆராய்தல்

போன்றவற்றின் பதிவுகளை பிரதான அலுவலகத்தில் ஆய்வு செய்தல்.

மேலும் நிபுணர் குழுவுடன் ஆணையாளர் அவர்கள் தலைமையில் 21.09.2011 அன்று மூன்றாவது கட்டமாக நடைபெற்ற கூட்டத்தில் பள்ளி மேலாண்மை திட்டத்தில் இப்புதிய நடைமுறைகளை அமுல்படுத்தவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 25,00,000ற்கு நிர்வாக அனுமதி பெறவும் பரிந்துரை செய்யப்பட்டது.

எனவே பள்ளி மேலாண்மை திட்டம் (School Management System) அமைப்பதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 25,00,000/– க்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண். 5540/2011/கே.9.

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 159 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 20

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் புதிதாக குனியமுத்தூர் மற்றும் குறிச்சி நகராட்சிப் பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்ற போதுமான வாகனங்கள் இல்லாத காரணத்தால் குப்பைகள் தேக்கமடையும் நிலை உள்ளது. ஏற்கனவே மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் சேகரமாகும் குப்பைகள் ஒப்பந்ததாரர் தி/ள்.கே.சி.பி.இன்ஜினியர்ஸ் & பேப்ரிக்கேட்டர்ஸ், கோவை அவர்கள் மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்படி புதிதாக இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி பகுதிகளில் உள்ள குப்பைகளை அகற்ற ஒப்பந்தப் புள்ளி கோரி ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் காலம் வரை இப்பணியின் அவசரம் அவசியத்தைக் கருதி மேற்படி ஒப்பந்ததாரர் தி/ள்.கே.சி.பி.இன்ஜினியர்ஸ் & பேப்ரிக்கேட்டர்ஸ், கோவை அவர்களுக்கு தெற்கு மண்டலப்பகுதிகளில் குப்பைகளை அகற்ற அளித்துள்ள வேலை உத்தரவு ந.க.எண்1644/2011/எம்.இ.4 நாள்:07-09-2011-இல் மாநகராட்சி பகுதிகளில் தெற்கு மண்டல வீதிகளிலிருந்து குப்பைகளை எடுத்து மாநகராட்சி உரக்கிடங்குகளுக்கு சுமார் 4 டன் கொள்ளவு கொண்ட குப்பைகளை டிப்பர் லாரி மூலம் எடுத்து சென்று கிடங்கில் கொட்டி விட்டு மீண்டும் வார்டுக்கு வர ( Up and Down ) ஒரு கிலோ மீட்டருக்கான வாடகை தொகை ரூ 78.00 (ரூபாய் எழுபத்தி எட்டு மட்டும்)க்கு புதியதாக இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் 01.11.2011முதல் பணி மேற்கொள்ளவும் அதற்குண்டான செலவினத்திற்கு அனுமதி வேண்டியும் இப்பணிக்கு மாமன்றத்தின் பின்னேற்பு பெற அனுமதியும் தெற்கு மண்டல மாநகராட்சிப் பகுதிகள் மற்றும் தெற்கு மண்டலத்திலிருந்து மத்திய மண்டலத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள வார்டு பகுதிகளில் குப்பைகள் அகற்ற உண்டாகும் செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.எண்.1644/2011/எம்.இ.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 160 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 21

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் புதிதாக கவுண்டம்பாளையம் நகராட்சி, வடவள்ளி மற்றும் வீரகேரளம் பேரூராட்சிப் பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்ற போதுமான வாகனங்கள் இல்லாத காரணத்தால் குப்பைகள் தேக்கமடையும் நிலை உள்ளது. ஏற்கனவே மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் சேகரமாகும் குப்பைகள் ஒப்பந்ததாரர் தி/ள்.கே.சி.பி.இன்ஜினியர்ஸ் & பேப்ரிக்கேட்டர்ஸ், கோவை அவர்கள் மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்படி புதிதாக இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி பகுதிகளில் உள்ள குப்பைகளை அகற்ற ஒப்பந்தப் புள்ளி கோரி ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் காலம் வரை இப்பணியின் அவசரம் அவசியத்தைக் கருதி மேற்படி ஒப்பந்ததாரர் தி/ள்.கே.சி.பி.இன்ஜினியர்ஸ் & பேப்ரிக்கேட்டர்ஸ், கோவை அவர்களுக்கு மேற்குமண்டலப்பகுதிகளில் குப்பைகளை அகற்ற அளித்துள்ள வேலை உத்தரவு ந.க.எண்1645/2011/எம்.இ.4 நாள்:07-09-2011-இல் மாநகராட்சி பகுதிகளில் தெற்கு மண்டல வீதிகளிலிருந்து குப்பைகளை எடுத்து மாநகராட்சி உரக்கிடங்குகளுக்கு சுமார் 4 டன் கொள்ளவு கொண்ட குப்பைகளை டிப்பர் லாரி மூலம் எடுத்து சென்று கிடங்கில் கொட்டி விட்டு மீண்டும் வார்டுக்கு வர ( Up and Down ) ஒரு கிலோ மீட்டருக்கான வாடகை தொகை ரூ 78.00 (ரூபாய் எழுபத்தி எட்டு மட்டும்)க்கு புதியதாக இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் 01.11.2011முதல் பணி மேற்கொள்ளவும் அதற்குண்டான செலவினத்திற்கு அனுமதி வேண்டியும் இப்பணிக்கு மாமன்றத்தின் பின்னேற்பு பெற அனுமதியும் மேற்குமண்டல மாநகராட்சிப் பகுதிகள் மற்றும் மேற்கு மண்டலத்திலிருந்து மத்திய மண்டலத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள வார்டு பகுதிகளில் குப்பைகள் அகற்ற உண்டாகும் செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.எண்.1645/2011/எம்.இ.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 161 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் புதிதாக துடியலூர், வெள்ளகிணறு, சரவணம்பட்டி மற்றும் சின்னவேடம் பட்டி பேரூராட்சிப் பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்ற போதுமான வாகனங்கள் இல்லாத காரணத்தால் குப்பைகள் தேக்கமடையும் நிலை உள்ளது. ஏற்கனவே மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் சேகரமாகும் குப்பைகள் ஒப்பந்ததாரர் தி/ள்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் , கோவை அவர்கள் மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்படி புதிதாக இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி பகுதிகளில் உள்ள குப்பைகளை அகற்ற ஒப்பந்தப் புள்ளி கோரி ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் காலம் வரை இப்பணியின் அவசரம் அவசியத்தைக் கருதி மேற்படி ஒப்பந்ததாரர் தி/ள்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோவை அவர்களுக்கு வடக்கு மண்டலப்பகுதிகளில் குப்பைகளை அகற்ற அளித்துள்ள வேலை உத்தரவு ந.க.எண்1643/2011/எம்.இ.4 நாள்: 15-09-2011-இல் மாநகராட்சி பகுதிகளில் வடக்கு மண்டல வீதிகளிலிருந்து குப்பைகளை எடுத்து மாநகராட்சி உரக்கிடங்குகளுக்கு சுமார் 4 டன் கொள்ளவு கொண்ட குப்பைகளை டிப்பர் லாரி மூலம் எடுத்து சென்று கிடங்கில் கொட்டி விட்டு மீண்டும் வார்டுக்கு வர ( Up and Down ) ஒரு கிலோ மீட்டருக்கான வாடகை தொகை ரூ 78.00 (ரூபாய் எழுபத்தி எட்டு மட்டும்)க்கு புதியதாக இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் 01.11.2011முதல் பணி மேற்கொள்ளவும் அதற்குண்டான செலவினத்திற்கு அனுமதி வேண்டியும் இப்பணிக்கு மாமன்றத்தின் பின்னேற்பு பெற அனுமதியும் வடக்குமண்டல மாநகராட்சிப் பகுதிகள் மற்றும் வடக்கு மண்டலத்திலிருந்து மத்திய மண்டலத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள வார்டு பகுதிகளில் குப்பைகள் அகற்ற உண்டாகும் செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.எண்.1643/2011/எம்.இ.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 162 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் புதிதாக காளப்பட்டி மற்றும் விளாங்குறிச்சி பேரூராட்சிப் பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்ற போதுமான வாகனங்கள் இல்லாத காரணத்தால் குப்பைகள் தேக்கமடையும் நிலை உள்ளது. ஏற்கனவே மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் சேகரமாகும் குப்பைகள் ஒப்பந்ததாரர் தி/ள்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ் , கோவை அவர்கள் மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்படி புதிதாக இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி பகுதிகளில் உள்ள குப்பைகளை அகற்ற ஒப்பந்தப் புள்ளி கோரி ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யும் காலம் வரை இப்பணியின் அவசரம் அவசியத்தைக் கருதி மேற்படி ஒப்பந்ததாரர் தி/ள்.எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோவை அவர்களுக்கு கிழக்கு மண்டலப்பகுதிகளில் குப்பைகளை அகற்ற அளித்துள்ள வேலை உத்தரவு ந.க.எண்1646/2011/எம்.இ.4 நாள்: 15-09-2011-இல் மாநகராட்சி பகுதிகளில் கிழக்கு மண்டல வீதிகளிலிருந்து குப்பைகளை எடுத்து மாநகராட்சி உரக்கிடங்குகளுக்கு சுமார் 4 டன் கொள்ளவு கொண்ட குப்பைகளை டிப்பர் லாரி மூலம் எடுத்து சென்று கிடங்கில் கொட்டி விட்டு மீண்டும் வார்டுக்கு வர ( Up and Down ) ஒரு கிலோ மீட்டருக்கான வாடகை தொகை ரூ 72.00 (ரூபாய் எழுபத்தி இரண்டு மட்டும்)க்கு புதியதாக இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் 01.11.2011முதல் பணி மேற்கொள்ளவும் அதற்குண்டான செலவினத்திற்கு அனுமதி வேண்டியும் இப்பணிக்கு மாமன்றத்தின் பின்னேற்பு பெற அனுமதியும் கிழக்குமண்டல மாநகராட்சிப் பகுதிகள் மற்றும் கிழக்கு மண்டலத்திலிருந்து மத்திய மண்டலத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள வார்டு பகுதிகளில் குப்பைகள் அகற்ற உண்டாகும் செலவினத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.எண்.1646/2011/எம்.இ.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 163 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 24

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 09-11-2011 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 7550/11/ எம்.டி.3 | கோவை மாநகராட்சியில் மேற்கு மண்டலத்தில் இணைந்துள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் | 40.62 | 10-10-11 முதல் அழைப்பு | 1. தி/ள் கே.சி.பி. இன்ஜினியர்ஸ் அன்ட் பேப்ரிகேட்டர்ஸ், கோயம்புத்தூர் **3.60% அதிகம்**<br>2. திரு.ஆர். மயில்வாணன், கோயம்புத்தூர் **0.90% குறைவு** | திரு.ஆர். மயில்வாணன், கோயம்புத்தூர் **0.90% குறைவு** |
| 2 | 7552/11/ எம்.டி.3 | கோவை மாநகராட்சியில் வடக்கு மண்டலத்தில் இணைந்துள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் | 51.00 | 10-10-11 முதல் அழைப்பு | 1. தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் **0.90 குறைவு**<br>2. தி/ள் கே.சி.பி. இன்ஜினியர்ஸ் அன்ட் பேப்ரிகேட்டர்ஸ், கோயம்புத்தூர் **3.60% அதிகம்** | தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் **0.90 குறைவு** |
| 3 | 7551/11/ எம்.டி.3 | கோவை மாநகராட்சியில் தெற்கு மண்டலத்தில் இணைந்துள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் | 67.50 | 10-10-11 முதல் அழைப்பு | 1. தி/ள் கே.சி.பி. இன்ஜினியர்ஸ் அன்ட் பேப்ரிகேட்டர்ஸ், கோயம்புத்தூர் **0.90% குறைவு**<br>2. திரு.ஆர். மயில்வாணன், கோயம்புத்தூர் **3.60% அதிகம்** | தி/ள் கே.சி.பி. இன்ஜினியர்ஸ் அன்ட் பேப்ரிகேட்டர்ஸ், கோயம்புத்தூர் **0.90% குறைவு** |
| 4 | 7553/11/ எம்.டி.3 | கோவை மாநகராட்சியில் கிழக்கு மண்டலத்தில் இணைந்துள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் மழைநீர் வடிகால்களினை சுத்தம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு ஈடுபடுத்துதல் | 30.50 | 10-10-11 முதல் அழைப்பு | 1. தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் **0.90 குறைவு**<br>2. தி/ள் கே.சி.பி. இன்ஜினியர்ஸ் அன்ட் பேப்ரிகேட்டர்ஸ், கோயம்புத்தூர் **3.60% அதிகம்**<br>3. தி/ள் ஹரி ராமன் லேபர் கான்ட்ராக்டர் **ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது.** | தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் **0.90 குறைவு** |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி மாமன்றம் 12-09-2011-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. எனவே, மேற்படி பணிகளுக்காக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண் 7550/2011/எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 164 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 25

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 12-09-2011, 14-09-2011 மற்றும் 15-09-2011 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| | **பொது நிதி** | | | | | |
| 1 | 7030/10/ எம்.டி.4 | புதிய வார்டு எண்.84 (பழைய வார்டு எண்.41) பழைய அறுவை கூட சாலையில் மாலைநேர படிப்பகம் கட்டுதல் | **20.00** | **07-09-2011 ஏழாவது அழைப்பு** | 1.தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் **4.87% அதிகம்**<br>2.திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் **16.67% அதிகம்** | தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் **4.87% அதிகம்** |
| 2 | 7294/09/ எம்.டி.2 | புதிய வார்டு எண்.45 (பழைய வார்டு எண்.66) கண்ணப்ப நகர் பகுதியில் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் கட்டுதல் | **20.00** | **13-09-2011 ஏழவாது அழைப்பு** | தி/ள் கே.எ.எஸ். கன்ஸ்ட்ரக்சன்ஸ், அசோசியட்ஸ், கோயம்புத்தூர் **4.90% அதிகம்** | தி/ள் கே.ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்சன்ஸ், அசோசியட்ஸ், கோயம்புத்தூர் **4.90% அதிகம்** |
| 3 | 548/11/ எம்.டி.5 | புதிய வார்டு எண்.11 (பழைய வார்டு எண்.63) மணியம் வேலப்பர் வீதியில் மகப்பேறு மருத்துவமனை கட்டுதல் | **19.30** | **07-09-2011 நான்காவது அழைப்பு** | 1.தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் **4.88% அதிகம்**<br>2.திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் **19.51 %அதிகம்** | தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் **4.88% அதிகம்** |
| 4 | 4587/10/ எம்.டி.5 | புதிய வார்டு எண்.21 (பழைய வார்டு எண்.57)-க்குட்பட்ட விவசாய கல்லூரி வளாகத்தில் உள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளி கட்டிடத்தை திரும்ப கட்டுதல் | **41.00** | **16-09-2011 ஆறாவது அழைப்பு** | 1.திரு.என். குருவாயூரப்பன், கோயம்புத்தூர் **10.32% அதிகம்**<br>2.திரு.கே. கோவிந்தராஜ். கோயம்புத்தூர் **4.37 %அதிகம்** | திரு.கே. கோவிந்தராஜ். கோயம்புத்தூர் **4.37 %அதிகம்** |
| 5 | 6/10/ எம்.டி.5 | புதிய வார்டு எண்.45 (பழைய வார்டு எண்.66) -ல் சங்கனூரில் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் வட-பகுதியில் உணவருந்தும் அறை, கூடுதலாக வகுப்பறைகள், நூலகக் கட்டிடம் மற்றும் படிக்கும் அறை கட்டுதல் | **40.00** | **16-09-2011 ஆறாவது அழைப்பு** | 1.திரு.ஆர். செல்வராஜ், கோயம்புத்தூர் **3.89% அதிகம்**<br>2.தி/ ள் கே.எ.எஸ். கன்ஸ்ட்ரக்சன்ஸ். கோயம்புத்தூர் **4.94 %அதிகம்** | திரு.ஆர். செல்வராஜ், கோயம்புத்தூர் **3.89% அதிகம்** |
| 6 | 1298/11/ எம்.டி.5 | புதிய வார்டு எண்.49 (பழைய வார்டு எண்.68) ரத்தினபுரி மேல்நிலைப் பள்ளிக்கு அபிவிருத்தி பணிகள் செய்தல் | **19.98** | **12-09-2011 இரண்டாவது அழைப்பு** | 1.திரு.ஆர். செல்வராஜ், கோயம்புத்தூர் **5.37% அதிகம்**<br>2.தி/ ள் பி.எஸ்.கே. அசோசியட்ஸ். கோயம்புத்தூர் **8.92 %அதிகம்** | திரு.ஆர். செல்வராஜ், கோயம்புத்தூர் **4.71% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்)** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | சட்டமன்ற உறுப்பினர் நிதி | | | | | |
| 7 | 6751/10/ எம்.டி.5 | புதிய வார்டு எண்.69 (பழைய வார்டு எண்.22) இராமசாமி நகர் பகுதியில் நூலகம் கட்டுதல் | **12.00** | **13-09-2011 ஐந்தாவது அழைப்பு** | திருமதி.பி.லட்சுமி கோயம்புத்தூர் **4.88% அதிகம்** | திருமதி.பி. லட்சுமி கோயம்புத்தூர் **4.88% அதிகம்** |
| | நாடாளுமன்ற உறுப்பினர் நிதி | | | | | |
| 8 | 10593/10/ எம்.டி.5 | புதிய வார்டு எண்.88 (பழைய வார்டு எண்.17) ஆவாரம்பாளையம் பட்டாளம்மன் கோவில் வீதி பகுதியில் சமுதாயக் கூடம் கட்டுதல் | **20.00** | **12-09-2011 10-வது அழைப்பு** | திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் **4.97% அதிகம்** | திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் **4.97% அதிகம்** |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- வரிசை எண். 1 முதல் 8 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 7030/2010/எம்.டி.4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 165 நாள் 30.11.2011</u>**

பொருளிலுள்ள வ.எண். 8 பணியின் பெயர் கலத்திலுள்ள புதிய வார்டு எண் 88 என்றிருப்பதை 40 என திருத்தம் செய்து படிக்கவும், அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 26

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 09-11-2011 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 12337/10/ எம்.டி.3 | வார்டு எண்.68 சூரியன் வீதியில் சமுதாயக் கூடம் கட்டுதல் | **23.75** | **23-09-2011 ஐந்தாவது அழைப்பு** | 1. திருமதி.கே. பங்கஜம், கோயம்புத்தூர் **15.51% அதிகம்**<br>2.தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் **4.84% அதிகம்** | தி/ள் என்.பி. கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் **4.84% அதிகம்** |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மேலே அட்டவணையில் உள்ள பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 12337/2010/எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 166 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 27**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல் முறைகள் 22551/11/2011 –4 நாள் 03.11.2011 கோவை மாநகராட்சி பகுதிகளில் பகுதி II திட்டம் 2011–12 கீழ் மாற்று திறனாளிகளுக்கான 12 கழிப்பறைகள் அமைக்க ரூ 20.52 இலட்சம் அரசு மானியமாக ஒதுக்கிடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | அமைவிடம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | அரசு மானியம் | மாநகராட்சி பொது நிதி |
|---|---|---|---|---|
| 1 | காந்திபுரம் நகரப் பேருந்து நிலையம் | 2.50 | 1.71 | 0.79 |
| 2 | காந்திபுரம் புற நகரப் பேருந்து நிலையம் | 2.50 | 1.71 | 0.79 |
| 3 | வ.உ.சி. பூங்கா பகுதி | 2.50 | 1.71 | 0.79 |
| 4 | உக்கடம் பேருந்து நிலையம் | 2.50 | 1.71 | 0.79 |
| 5 | மேட்டுப்பாளையம் சாலை பேருந்து நிலையம் | 2.30 | 1.71 | 0.59 |
| 6 | மாவட்ட ஆட்சியர் வளாகம் | 2.30 | 1.71 | 0.59 |
| 7 | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் | 2.00 | 1.71 | 0.29 |
| 8 | மாநகராட்சி தெற்கு மண்டலம் வளாகம் (தற்போது மத்திய மண்டலம்) | 2.50 | 1.71 | 0.79 |
| 9 | மாநகராட்சி பிரதான அலுவலகம் | 2.50 | 1.71 | 0.79 |
| 10 | மேற்கு மண்டல அலுவலக வளாகம் | 2.30 | 1.71 | 0.59 |
| 11 | வடக்கு மண்டல அலுவலக வளாகம் | 2.30 | 1.71 | 0.59 |
| 12 | கிழக்கு மண்டல அலுவலக வளாகம் | 2.00 | 1.71 | 0.29 |
| | மொத்தம் | 28.20 | 20.52 | 7.68 |

இதில், அரசு மானியமாக ரூ 20.52 இலட்சம் அளித்துள்ளது. மீதமுள்ள ரூ.7.68 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவிட மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 6294 /2011/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 167 நாள் 30.11.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 28

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற உறுப்பினர்கள் – அலைபேசி கட்டணம் – மாதவாடகை உயர்த்தி நிர்ணயம் செய்தல் – தொடர்பாக.

*****

பொதுமக்களிடமிருந்து அவ்வப்போது பெறப்படும் குறைகளை உடனுக்குடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களைத் தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்யும் விதமாக அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் செல்போன் சிம்கார்டுகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்த வசதியைப் பயன்படுத்தி மாநகராட்சி அலுவலர்களுக்கு மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ள செல்போன்களை மட்டும் மாமன்ற உறுப்பினர்கள் தொடர்பு கொள்ள இயலும். பிற செல்போன்களோடு தொடர்பு கொள்ள இயலாது. மேலும் இதற்கென ரூ. 150/– மாதம் ஒன்றுக்கு இணைப்பு ஒன்றுக்கு மாநகராட்சி நிதியிலிருந்து செலவிடப்பட்டு வருகிறது.

இதற்காக அனுமதிக்கப்பட்ட மாதாந்திர கட்டணத் தொகையினை ரூ. 150/– லிருந்து ரூ. 250/– (CUG கட்டணம் உட்பட) ஆக உயர்த்தி நிர்ணயம் செய்யவும், இதற்கு ஆகும் கூடுதல் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ. 10,000/– (100 x 100) வீதம் இந்த நிதியாண்டில் 01.12.2011 முதல் 31.03.2012 வரை 4 மாதத்திற்கு ஏற்படும் செலவினம் ரூ. 40,000/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். எண். 10683/2011/பி.1.

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 168 நாள் 30.11.2011</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களுக்கு இம்மாநகராட்சியால் வழங்கப்பட்டு உபயோகத்தில் இருந்து வரும் செல்போனிலிருந்து (சிம்கார்டு) பிற செல்போன்களுக்கு தொடர்பு கொள்ள மாதம் ஒன்றுக்கு ஒரு இணைப்புக்கு கட்டணம் ரூ.500 (ரூபாய் ஐந்நூறு மட்டும்) ஆக உயர்த்தி நிர்ணயம் செய்து மாநகராட்சி நிதியிலிருந்து செலவிட முடிவு செய்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 29

கோவை மாநகராட்சி பிரதான அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களில் கணினிகளை இயக்க தேவையான கணினி விபர பதிவாளர், கண்காணிப்பாளர் மற்றும் நெட்ஒர்க் இன்ஜினியர், உதவி நெட்ஒர்க் இன்ஜினியர் ஆகியோரை சப்ளை செய்ய மதிப்பீடு ரூ. 50,00,000/- க்கு தயாரிக்கப்பட்டு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு மூலம் கடந்த 8-7-11 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

இப்பணிக்கு 23-9-2011 ல் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பித்தனர்

1. தி/ள். கே.சி.பி இஞ்சினியர்ஸ் & பேபரிகேட்டர்ஸ், கோவை -28
2. தி/ள். வர்தான் இன்பராஸ்டிரக்சர்ஸ் , கோவை – 45
3. தி/ள். கே.ஜி.இன்பர்மேசன் சிஸ்டம்ஸ் (பி) லிமிட், கோவை -35

மேற்படி நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப உறைகள் 23-9-11 அன்று திறக்கப்பட்டது இந்நிறுவனங்கள் சமர்ப்பித்த தொழில்நுட்ப உறைகளை தொழில்நுட்ப குழு மூலம் பரிசீலனை செய்யப்பட்டதில் தி/ள். கே.சி.பி இஞ்சினியர்ஸ் & பேபரிகேட்டர்ஸ், கோவை மற்றும் தி/ள். வர்தான் இன்பராஸ்டிரக்சர்ஸ் கோவை நிறுவனங்களின் தொழில் நுட்ப உறைகள் தேர்வு செய்யப்பட்டது அதனை தொடர்ந்து மேற்படி இரு நிறுவனங்களின் விலைப்புள்ளி உறைகள் 9-11-2011 அன்று திறக்கப்பட்டது. இதில் இரு நிறுவனங்களும் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் அளித்திருந்தனர்.

| வ.எண் | பணியின் விபரம் | பணியாளர் | தி/ள். கே.சி.பி இஞ்சினியர்ஸ் & பேபரிகேட்டர்ஸ் | தி/ள். வர்தான் இன்பராஸ்டிரக்சர்ஸ் |
|---|---|---|---|---|
| 1 | கணினி விபரப்பதிவாளர் | 65 | 249.00 / நாள் ஒன்றுக்கு | 260.00 / நாள் ஒன்றுக்கு |
| 2 | கண்காணிப்பாளர் மற்றும் நெட் ஒர்க் இன்ஜினியர் | 1 | 749.00/ நாள் ஒன்றுக்கு | 728.00 / நாள் ஒன்றுக்கு |
| 3 | உதவி நெட்ஒர்க் இன்ஜினியர் | 1 | 649.00 / நாள் ஒன்றுக்கு | 675.00 / நாள் ஒன்றுக்கு |

மேற்படி, நிறுவனங்களின் விலைப்புள்ளியினை 16-11-2011 ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள தி/ள். கே.சி.பி இஞ்சினியர்ஸ் & பேப்ரிகேட்டர்ஸ், கோவை அவர்களிடம் விலைகுறைப்பு கேட்கலாம் என பரிந்துரை செய்ததின் பேரில் மேற்படி நிறுவனத்திற்கு கடிதம் மூலம் விலை குறைப்பு கேட்கப்பட்டது அதன் பேரில் தி/ள். கே.சி.பி இஞ்சினியர்ஸ் & பேபரிகேட்டர்ஸ், கோவை நிறுவனம் தனது 24-11-2011 தேதிய கடிடத்தில் கீழ்கண்டவாறு விலைகுறைப்பு செய்து கொடுத்துள்ளது.

| வ.எண் | பணியின் விபரம் | பணியாளர் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளியில் அளித்த தொகை | விலை குறைப்பு செய்து கொடுத்துள்ள தொகை |
|---|---|---|---|---|
| 1 | கணினி விபரப்பதிவாளர் | 65 | 249.00 / நாள் ஒன்றுக்கு | 245.00 / நாள் ஒன்றுக்கு |
| 2 | கண்காணிப்பாளர் மற்றும் நெட் ஒர்க் இன்ஜினியர் | 1 | 749.00/ நாள் ஒன்றுக்கு | 725.00 / நாள் ஒன்றுக்கு |
| 3 | உதவி நெட்ஒர்க் இன்ஜினியர் | 1 | 649.00 / நாள் ஒன்றுக்கு | 645.00 / நாள் ஒன்றுக்கு |

எனவே தி/ள். கே.சி.பி இஞ்சினியர்ஸ் & பேபரிகேட்டர்ஸ், கோவை அவர்கள் மேற்படி விலைகுறைப்பு செய்துள்ள தொகையை ஏற்று 25-11-2011ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவின் பரிந்துரையை ஆணையாளர் அவர்கள் ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து, மேற்படி நிறுவனம் தி/ள். கே.சி.பி இஞ்சினியர்ஸ் & பேபரிகேட்டர்ஸ், கோவை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண். 5259/2011/WS6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 169 நாள் 30.11.2011</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகங்களில் கணினிகளை இயக்கத் தேவையான விவரப்பதிவாளர் உள்ளிட்டவை ஒப்பந்தப்புள்ளி ஏற்பது சம்பந்தமாக இவ்வினத்தில் சுமார் ரூ.50.00 இலட்சம் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. டெண்டர் ரூ. 62.05 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்த டெண்டரை ரத்துசெய்துவிட்டு மறு டெண்டர் கோர தீர்மானிக்கப்பட்டது..

---

**பொருள் எண் 30**

கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மாநகராட்சி பள்ளிகளில் துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர், மின்கம்பியாளர் மற்றும் மேற்பார்வையாளர்களை கொண்டு ஒருவருட காலத்திற்கு தூய்மை பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு மதிப்பீடு ரூ.48,90,000/-க்கு தயாரிக்கப்பட்டு மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைவான விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.ஆர்.மயில்வாணன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.52 நாள் 19.10.2010ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்படி பணியானது 01.11.2010 முதல் ஆரம்பிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

இப்பணிக்கான மதிப்பீட்டில் பள்ளி அரசு விடுமுறை நாட்களில் தூய்மை பணிகள் மற்றும் கழிவறை சுத்தம் செய்யும் பணிகள் செய்யா வண்ணம் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டது. இந்நிலையில் பள்ளி விடுமுறைக் காலத்தில் சட்டமன்ற தேர்தல்-2011 நடைபெற்றதாலும் தற்பொழுது சனிக்கிழமைகளில் பள்ளி சிறப்பு வகுப்புகள் நடைபெற்று வருவதால் அந்த நாட்களில் பள்ளிகளில் தூய்மைப் பணிகள் செய்ய வேண்டியதாயிற்று. 01-11-2010 முதல் 30-09-2011 வரையிலான 11 மாத காலத்திற்கு ரூ47,45,038/- செலவினம் ஆகியுள்ளது. அக்டோபர் மாத பராமரிப்பிற்கு சுமார் ரூ4,65,000/- தேவைப்படுகிறது.

எனவே, மொத்தம் ரூ 52,10,038/- செலவினத்திற்கும், மேற்படி ஒப்பந்ததாரா் மூலமே பணியினை மேற்கொண்டதற்கும், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதி பக்க எண்.14(9) ன்படி ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்யும் அதிகாரமுடையவருக்கு 25% வரை கூடுதல அளவுகளை ஏற்கலாம் என்று உள்ளதால், இக்கூடுதலான காலங்களுக்கு செய்யப்பட்ட மொத்த செலவீனத் தொகை ரூ.52,10,038/-க்கு ஒப்பந்த விகிதத்திலேயே ஒப்பந்ததாரா் திரு.ஆா்.மயில்வாணன் அவா்களுக்கு வழங்க வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.9258/2010/எம்.டி.5

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 170 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 31

பொருள்– கோவை மாநகராட்சி –பொறியியல் பிரிவு –இடை நிரப்பு நிதி 2011–12
வீரகேரளம் பகுதியில் எரிவாயு மயானம் அமைத்தல் – மாமன்றம் ஒப்புதல்
கோருதல் – தொடா்பாக

---

நகராட்சி நிா்வாக ஆணையகரத்திலிருந்து இடைநிரப்பு நிதி (O&M gap filling fund) 2011–12 வீரகேரளம் பகுதியில் எரிவாயு மயானம், அமைக்க ரூ 42.85 இலட்சத்திற்க்கு நிதி ஒதுக்கீடு செய்ய கருத்துரு கோரப்பட்டுள்ளது. இப்பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ98.50 இலட்சம் ஆகும். நகராட்சி நிா்வாக ஆணையரால் இப்பணிக்கு நிா்வாக அனுமதி வழங்குவதற்கு மாமன்ற தீா்மானம் கோரப்பட்டுள்ளது. இப்பணிக்கென இடைநிரப்பு நிதி 2011–12ல் ஒதுக்கீடு செய்யப்படும் ரூ42.85 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ 55.65 இலட்சத்திற்கான மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இப்பணிக்கு நிா்வாக அனுமதி வேண்டியும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 10680 /2011/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 171 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 32

பொருள்– கோவை மாநகராட்சி –பொறியியல் பிரிவு –இடை நிரப்பு நிதி 2011–12
குறிச்சி பகுதியில் எரிவாயு மயானம் அமைத்தல் – மாமன்றம் ஒப்புதல்
கோருதல் – தொடா்பாக

---

நகராட்சி நிா்வாக ஆணையகரத்திலிருந்து இடைநிரப்பு நிதி (O&M gap filling fund) 2011–12 குறிச்சி பகுதியில் எரிவாயு மயானம், அமைக்க ரூ 42.85 இலட்சத்திற்க்கு நிதி ஒதுக்கீடு செய்ய கருத்துரு கோரப்பட்டுள்ளது. இப்பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ98.50 இலட்சம் ஆகும். நகராட்சி நிா்வாக ஆணையரால் இப்பணிக்கு நிா்வாக அனுமதி வழங்குவதற்கு மாமன்ற தீா்மானம் கோரப்பட்டுள்ளது. இப்பணிக்கென இடைநிரப்பு நிதி 2011–12ல் ஒதுக்கீடு செய்யப்படும் ரூ42.85 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ 55.65 இலட்சத்திற்கான மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இப்பணிக்கு நிா்வாக அனுமதி வேண்டியும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டபப்டுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 10681 /2011/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 172 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 33**

கோவை மாநகராட்சி பொறியியல் பிரிவு புதிதாக குறிச்சி, குனியமுத்தூர், கவுண்டம்பாளையம் நகராட்சி பகுதிகள், வடவள்ளி, வீரகேரளம், துடியலூர் வெள்ளக்கிணறு, சின்ன வேடம்பட்டி, சரவணம்பட்டி, விளாங்குறிச்சி, மற்றும் காளப்பட்டி பேரூராட்சி, பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளது. எனவே இப்பகுதிகளில் தற்சமயம் 40 வாட் திறன் கொண்ட குழல் விளக்குகள் 20,945 எண்ணிக்கையில் உள்ளன. இத்தெரு விளக்குகள் போதிய பராமரிப்பின்றி சுமார் 50% பழுதடைந்த நிலையில் உள்ளன. மேலும் இப்பகுதிகளிலுள்ள 40 வாட் குழல் விளக்குகளால் போதிய வெளிச்சம் இல்லாமல் உள்ளதாகவும் மாநகராட்சியின் ஏனைய பகுதிகளில் உள்ளது போன்று 70 வாட்க்கு அதிகமான திறன் கொண்ட மின் விளக்குகளை ஒவ்வொரு சாலையின் அகலம் அச்சாலையில் செல்லும் பொதுமக்கள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை போன்ற தன்மைக்கேற்ப அதிக வெளிச்சம் கொண்ட தெருவிளக்குகளை அமைத்து தருமாறு பொது மக்களிடமிருந்தும் தேர்ந்தேடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்தும் கோரிக்கைகள் தொடர்ந்து வரப் பெறுகின்றன.

எனவே இப்பகுதிகளுக்கு தேவையான வெளிச்சம் அளிக்கும் மின்விளக்குகளை மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாகிறது. தற்போது தமிழக அரசு மின்சாரத்தை சிக்கனமாகச் செயல்படுத்த அறிவுரை வழங்கியுள்ளது. அதன்பேரில் மின்சேமிப்பு விளக்குகள் அமைப்பதால் மின்சேமிப்பு ஏற்படுவதற்கும், குறைந்த மின்னழுத்தம் (Low Voltage) இருந்தாலும் மின்விளக்குகள் தடையில்லாமல் எரிவதைக் கருத்தில் கொண்டும், இப்பகுதிகளில் மின்சேமிப்பு விளக்குகள் (Light Emitting Diode - LED Light) அமைக்க உத்தேசிக்கப்ட்டுள்ளது. மேற்படி தெருவிளக்குகளை பொது மற்றும் தனியார் பங்களிப்பு (Public Private Partnership-PPP Mode) மூலம் பொது மக்களின் நலன் கருதியும். மின் சிக்கனத்தை கருத்தில் கொண்டும் அதிக அளவு மின்சாரம் சேமிக்க கூடிய LED விளக்குகளை தற்சமயம் உள்ள விளக்குகளுக்குப் பதிலாக படிப்படியாக மாற்றி அமைப்பது குறித்து நன்கு பரிசீலித்து தேவையான நடவடிக்கையினை மேற்கொண்டு நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலமாக அரசிடம் அனுமதி பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 5263 /2011/எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 173 நாள் 30.11.2011</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 34**

கோவை மாநகராட்சி பொறியியல் பிரிவு – தமிழக அரசின் 2011– 12 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் (Part II Scheme ) கீழ் நிதி உதவி பெறுவதற்காக பின் வரும் திட்ட மதிப்பீடுகள் நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது .

| | | மதிப்பீடு(ரூ) |
|---|---|---|
| 1. | மாமன்ற கூட்ட அரங்கம் | 3.90 கோடி |
| 2. | தெற்கு மண்டல அலுவலகம் | 2.40 கோடி |
| 3. | ஆழியார் கூட்டு குடிநீர் திட்டம் ஜெனரேட்டர் பொருத்துதல் மற்றும் இயக்குதல் | 2.73 கோடி |
| 4. | வடவள்ளி பேருந்து நிறுத்துமிடம்(Bus terminal) | 2.80 கோடி |
| 5. | குறிச்சி பேருந்து நிலையம் | 2.25 கோடி |
| | **மொத்தம்** | **14.08 கோடி** |

தகவலுக்காகவும், பதிவிற்காகவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 10679 /2011/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 174 நாள் 30.11.2011</u>**

தமிழக அரசின் **2011-12** ஆம் ஆண்டிற்கான பகுதி **II** திட்டத்தின் (**Part II Scheme**) கீழ் பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 5 வரையிலான வேலைகளுக்கு ரூ14.08 கோடி நிதி உதவி பெறுவதற்கான திட்ட மதிப்பீடுகள் கோவை மாநகராட்சி பொறியியல் பிரிவினரால் நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள தகவல் பதிவு செய்யப்பட்டது.

---

**பொருள் எண் 35**

கோவை மாநகராட்சி பொறியியல் பிரிவு புதிதாக, இணைக்கப்பட்டுள்ள குனியமுத்தூர், குறிச்சி ,கவுண்டம்பாளையம் நகராட்சி பகுதிகள், வடவள்ளி, வீரகேரளம், துடியலூர் வெள்ளக்கிணறு, சின்ன வேடம்பட்டி, சரவணம்பட்டி, மற்றும் காளப்பட்டி பேரூராட்சி மற்றும் விளாங்குறிச்சி ஊராட்சி பகுதிகளில் அடிப்படை கட்டடைப்பு போன்ற சிறப்பு வசதிகள் செய்ய தமிழக அரசால் (IUDM) 2011–2012 திட்டத்தின் கோவை மாநகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடித எண் 47923/2011/இ3 நாள் 24.11.2011 இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணிகளின் விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சாலைப்பணிகள் | 500.00 |
| 2 | வடிகால் பணிகள் | 500.00 |
| 3 | தெரு விளக்குகள் | 140.00 |
| 4 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | 1300.00 |
| மொத்தம் | | 2440.00 |

புதிதாக இணைக்கபட்டுள்ள உள்ளாட்சிப் பகுதிகளில் மேற்படி பணிக்கு ஒதுக்கீடு தொடர்பான தகவலினை மாமன்றத்தின் பதிவிற்கும், இது தொடர்பான விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரித்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்ப அனுமதியும் கோரி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 10682 /2011/எம்.டி.2

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 174 நாள் 30.11.2011</u>

தமிழக அரசால் **IUDM (2011-2012)** திட்டத்தின் கீழ் கோவை மாநகராட்சிக்கு பொருளில் கண்டுள்ள வ.எண். 1 முதல் 4 வரையிலான பணிகளுக்கு ரூ 2440.00 இலட்சங்கள் மானியம் ஒதுக்கீடு செய்துள்ளதை தெரிவிக்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடிதம் எண் 47923/2011/இ3 நாள் 24.11.2011ஐ பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பான DPR தயாரித்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்ப அனுமதிக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

**(ஒப்பம்) செ.ம.வேலுசாமி**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**